விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in SriIanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 293 வள்ளுவர் ஆண்டு 2055 புரட்டாதி 21 திங்கட்கிழமை (07.10.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/=

## இலங்கையின் அரசியல் நெருக்கடிக்கு உள், வெளிநாட்டு காரணிகளே காரணம்

– ஜெய்சங்கர்

7 ஆம் பக்கம் பார்க்க

## ஐயாயிரம் பேர் தேர்தல் கடமையில்

– பெப்ரல் அறிவிப்பு

13 ஆம் பக்கம் பார்க்க

## ஊழல்வாதிகளுக்கு வேட்புமனு வழங்க வேண்டாம்

– மார்ச் 12 இயக்கம் கோரிக்கை

3 ஆம் பக்கம் பார்க்க

### ஈஸ்டர் தாக்குதல்

## பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி நிலைநாட்டப்படும்

### ஜனாதிபதி அநுர குமார உறுதி



(நீர்கொழும்பு)

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பிலான விசாரணைகளை துரிதப்படுத்துவதோடு, மீண்டும் அவ்வாறானதொரு அழிவு நாட்டுக்கு ஏற்பட இடமளிக்காத வகையில், பாதிக்கப்பட்டவர்களுக்காக 15



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பொன்விழாவை முன்னிட்டு புதிய அலங்கார நுழைவாயில் சம்பிரதாயபூர்வமாக நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

## கணக்கெடுப்பு இன்று ஆரம்பம்

(கொழும்பு)

15ஆவது மக்கள் தொகை மற்றும் வீட்டுக் கணக்கெடுப்பில் தனிநபர் மற்றும் வீட்டுத் தகவல் சேகரிப்பு நடவடிக்கை இன்று ஆரம்பமாகவுள்ளது. 15

### யாழ். – கொழும்பு

## புகையிரத சேவை தொடர்ந்தும் தாமதம்

(கொழும்பு)

வடக்கு தொடருந்து மார்க்கத்தின் அநுராதபுரம் முதல் மஹவ வரையிலான தொடருந்து மார்க்கத்தின் திருத்தப் பணிகள் காரணமாக யாழ். - கொழும்பு தொடருந்து சேவை மேலும் 15

# தமிழ்த் தேசிய விரோதிகளின் கைக்குள் தமிழரசுக் கட்சி

### அதனால் கட்சியிலிருந்து விலகுகிறேன்
### ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா அதிரடி அறிவிப்பு



(யாழ்ப்பாணம்) தமிழ்த் தேசிய விரோதிகளின் கைகளுக்குள் சிக்குண்ட தமிழரசுக் கட்சியில் தொடர்ந்து பயணிப்பது பொருத்தமற்றது. ஆகையால் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அனைத்துப் பதவிகள், பொறுப்புக்களில் இருந்து விலகுவதாக ஜனாதிபதி சட்டத்தரணியும் தமிழரசுக் கட்சியின் மத்திய குழு உறுப்பினருமாகிய கே.வி.தவராசா தெரிவித்துள்ளார். (02ஆம் பக்கம் பார்க்க)

## தமிழரசுக் கட்சியின் யாழ்.மாவட்ட வேட்பாளர்கள்

(வவுனியா)

யாழ்ப்பாணம் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டத்துக்கான வேட்பாளர்களைத் தமிழரசுக் கட்சி நேற்று அறிவித்தது.

இதன் பிரகாரம் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், எம்.ஏ.சுமந்திரன் மற்றும் எஸ்.சி.சி.இளங்கோ, சட்டத்தரணி கேசவன் சயந்தன், சந்திரலிங்கம் சுகிர்தன், சுரேக்கா 15

### யாழ். – கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்

## ஒன்பது பேரைக் களமிறக்கியது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சார்பில துவிச்சக்கர வண்டிச் சின்னத்தின் கீழ் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி தேர்தல் மாவட் 15

## கொழும்புத்துறையில் வயோதிபரின் சடலம்

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை எழிலூர்ப் பகுதியில் வயோதிபர் ஒருவரது சடலம் நேற்று அவரது வீட்டிலிருந்து மீட்கப்பட்டுள்ளது.

அதே பகுதியைச் சேர்ந்த சீமான்பிள்ளை பத்மதாசன் (வயது-74) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே சடலமாக மீட்கப்பட் 15

## முறைப்பாடுகளை உடன் விசாரிக்குக

### பதில் பொலிஸ்மா அதிபர் பணிப்பு

(கொழும்பு)

பொதுமக்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அனைத்து சிறு முறைப்பாடுகளையும் அடுத்த இரண்டு வாரங்களில் விசாரணை செய்து தேவை 15

## விபத்தில் படுகாயமடைந்த முன்னாள் போராளி மரணம்

(யாழ்ப்பாணம்)



வடமராட்சி கிழக்கு செம்பியன் பற்றுப் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற விபத்தில் காயமடைந்து சிகிச்சை பெற்றுவந்த முன்னாள் போராளியொருவர் நேற்று ஞாயிற்றுக் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறாது நன்மைக் காக்கும் உங்கள் நாளிதழ்

அகரம் உயர் நிலைக் கல்லூரி
AHARAM HIGH STANDARD COLLEGE
காங்கேயன் துறைச்சாலை
மல்லாகம் கொக்குவில்
புதிய தரம் 06 தமிழ்மொழி மூல ஆங்கிலமொழி வகுப்புக்கள் ஆரம்பம்
12.10.2024 [சனிக்கிழமை]
விஜயதசமி நன்னாளில்
நேரம் மாலை - 3.02 முதல் 4.32 வரை
(ஆரம்பிக்கும் நாள் முதல் ஜனவரி 16 வரை இலவசமாக வகுப்புக்கள் நடைபெறும்.)
புதன் முதல் வெள்ளி வரை மாலை 2.00 மணியில் இருந்து 6.00 மணி வரை சனி, ஞாயிறு தினங்களில் காலை 7.00 மணியில் இருந்து மாலை 6.00 மணி வரை பெற்றுக்கொள்ளமுடியும்.
(2234)
"அகரம் எம் தேசக்குழந்தைகளின் ஏற்றமிகு எதிர்காலம்" இயக்குநர்



## காணி விற்பனைக்கு உண்டு
யாழ்ப்பாணம் கைதடியில் 48 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. A9 வீதி முகப்புடன்
★ 20 அடிப் பாதை
★ 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
★ பார்வையிடும் நேரம் காலை 6.00- மாலை 6.00
★ தரகர் தேவையில்லை
(2233)
070 168 3354
070 668 3354


## தமிழ்த் தேசிய...

இது தொடர்பில் நேற்றைய தினம் (06) அவர் வெளியிட்ட அறிக்கையின் முழு விபரம் வருமாறு,

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அனைத்துப் பதவி மற்றும் பொறுப்புக்களில் இருந்தும் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா ஆகிய நான் விலகுகின்றேன்.

இதன்படி, இலங்கை தமிழரசுக் கட்சியின் கொழும்பு கிளைத் தலைவர் பதவி, இலங்கை தமிழரசுக் கட்சியின் சட்டக் குழு தலைவர், மத்திய குழு உறுப்பினர் ஆகிய அனைத்துப் பொறுப்புக்களில் இருந்தும் விலகுகின்றேன்.

குறிப்பாக தமிழரசுக் கட்சியின் வேட்பாளர் நியமனத்திற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்த போது அதில் யாழ். கிளிநொச்சி தேர்தல் மாவட்டத்தினுடைய மற்றும் கொழும்பு வாழ் மக்களினுடைய கோரிக்கைக்கு அமைவாக நான் விண்ணப்பத்தை கொடுத்திருந்தேன் அதனை எந்தவொரு காரணமும் இல்லாமல் எம்.ஏ. சுமந்திரன் நிராகரித்துள்ளார்.

மேலும், சுமந்திரன் தான் சார்ந்த அணியை வேட்பாளர் பட்டியலில் தெரிவு செய்து கட்சிக்காக தொடர்ச்சியாக பாடுபடுகின்ற மிக முக்கியமான திறமைசாலிகளை உள்ளெடுக்காத தன் அடிப்படையிலும் தான் நியமிக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்த மக்களுக்கு பொறுப்புச் சொல்ல முடியாத ஒரு கட்டத்தினால் இந்த தீர்மானத்தை எடுத்துள்ளேன்.

தான்தோன்றித் தனமாக தமிழரசுக் கட்சியின் தேர்தலில் தோல்வியுற்ற பின்னரும் கட்சியை பதில் பொதுச் செயலாளர் சத்தியலிங்கத்தின் ஊடாக முழுச் செயற்பாடுகளையும் நிர்வகித்து வரும் சுமந்திரன் கட்சியை அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்வதை அனுமதிக்க முடியாது.

இலங்கை தமிழரசுக் கட்சி வரலாற்றில் பல தியாகங்களாலும், வீரம் செறிந்த பல போராட்ட சரித்திரங்களாலும் உருவாக்கப்பட்டது. 2002 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தமிழ்த் தேசியத் தலைவரின் உயர்ந்த சிந்தனையின் அடிப்படையில் வீடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக உருவாக்கப்பட்டது.

அந்த வீட்டில் இருந்த அனைவரையும் வெளியேற்றி, தமிழரசுக் கட்சிகளின் தூண்களையும் வெளியேற்றி, மேலும் தென்னிலங்கையின் முகவர் அரசியல் செய்வதற்கு முற்படுகின்ற சுமந்திரனின் தான்தோன்றித் தனமான செயற்பாடு ஒட்டு மொத்த தமிழரசுக் கட்சியையும் அழிக்கும்.

எனவே என்னை நேசிக்கும் யாழ்.கிளிநொச்சி தேர்தல் மாவட்டம், வடக்கு - கிழக்கு மக்களுக்கு நான் அறியத் தருவது. வீரத்தின் பால் வழி நடத்தப்பட்ட கட்சி இன்று சோரம் போகின்ற ஒரு ஆபத்தான நிலையில் இருக்கின்ற படியால், அனைத்துப் பொறுப்புக்களில் இருந்தும் நான் விலகுகின்றேன்.

தமிழ்த் தேசிய விரோதிகளின் கைகளுக்குள் சிக்குண்ட தமிழரசுக் கட்சியில் தொடர்ந்தும் பயணிப்பது பொருத்தமற்றது என்பதால் இந்த முடிவு எட்டப்படுகிறது. தனிநபர்களின் தன்னிச்சையான போக்குக்குள் சிக்குண்டு தமிழரசுக் கட்சி சின்னாபின்னமாகி இருக்கின்ற நிலையில் தொடர்ந்தும் தமிழரசுக் கட்சியில் பயணிக்க முடியாது.

தேசியத்தை கண்முன்னாலே குழி தோண்டிப் புதைக்கின்ற செயற்பாடுகளுக்கு துணை போகின்ற வரலாற்றுத் துரோகத்தை நான் செய்யத் தயார் இல்லை என்பதால் தமிழரசுக் கட்சியிலிருந்து விலகிக் கொள்கிறேன்.

தமிழ்த் தேசியத்தை உரிய பலத்துடன் நிலைநாட்ட என்ன செய்ய முடியுமோ அதைச் செய்வதற்குண்டான வழிவகைகள் குறித்து எதிர்காலத்தில் சிந்திப்பதற்கு முடிவெடுத்துள்ளேன் என அந்த அறிக்கையில் கே.வி.தவராசா குறிப்பிட்டுள்ளார். (ந-7)


## காணி விற்பனைக்கு உண்டு
யாழ்ப்பாணம் உரும்பிராயில் 18 நிலப்பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. செல்லத்துரை வீதி முகப்புடன்
- 2 பரப்பாகவும் 1 1/2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட 20 அடிப் பாதையுடன்
- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி
- உரும்பிராய் சந்தி 750m தூரம்
- உரும்பிராய் சந்தியில் இருந்து கோப்பாய் செல்லும் பிரதான காபற்வீதி 250m தூரம்
- நன்னீர் ஊற்று, செம்மண் நிலம், நல்ல சூழல்
- பார்வையிடும் நேரம் : காலை 6.00 - மாலை 6.00 வரை
(2233)
077 288 0152, 076 739 0413



## CANADA/ UK விசா சேவைகள்
Visit Visa Student Visa
- மிக குறுகிய செயற்படுத்தல் காலம்
- மிகக் குறைந்த கட்டணங்கள்
- சட்டத்தரணி மூலம் ஒப்பந்தம்
- நேர்த்தியான ஆவண ஒழுங்குபடுத்தல்கள்
- ஏற்கனவே நிராகரிக்கப்பட்ட விசாக்கள் மீள விண்ணப்பித்து தரப்படும்.
(407)
12 வருட கால அனுபவம் மிக்க Winstar Visa Consultants உடன் இன்றே இணையுங்கள்
மேலதிக தொடர்புகளுக்கு முன்பதிவு செய்து நேரில் வரவும்
Winstar Consultants Pvt Ltd
45, Vembady Street, Jaffna.
071 071 6979



## வேலையாள் தேவை
தளபாடக் கடை ஒன்றிற்கு விற்பனையாளர் தேவை. (2008)
K.K.S வீதி, கோண்டாவில்.
தொடர்புகளுக்கு
077 713 0872



## பணிப்பெண் தேவை
எமது வீட்டில் தங்கி நின்று பணிபுரிவதற்கு 40 வயதிற்கு மேற்பட்ட பெண் ஒருவர் தேவை.
(2230)
077 073 5931



எமது இனத்தின் இன்னல் தீர, வடகிழக்கு மாகாணங்களில் சேவையாற்ற, வேட்பாளராக விரும்புகின்ற ஆண், பெண் இருபாலரின் கவனத்திற்கும்

ஆள வேண்டுமென்றோ வாழ வேண்டுமென்றோ ஆசை கொள்ளாமல் ஒரு புரட்சிகரமான தூய அரசியலை எம் மண்ணில் தோற்றுவிப்பதே எம் இலட்சியமாகக் கொண்டு.
தமிழ் இளையோருக்கு நாங்கள் அறைகூவல் விடுக்கின்றோம்.
நான் பெரிது நீ பெரிது என வாழாமல் நாடு பெரிது என நினைத்து எங்களுடன் கைகோருங்கள்.
(2232)
தம்பி தம்பிராஜா தலைமை ஒருங்கிணைப்பாளர்
அடக்குமுறைகளுக்கு எதிரான ஜனநாயக அமைப்பு
தொலைபேசி : 077 730 1961 , 074 005 5961
மின்னஞ்சல் : caclanka.lk@gmail.com


## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 10.09.2024 அன்று இறைவனடி சேர்ந்த எங்கள் குடும்பத் தலைவர்

அமரர் செல்லன் செல்வராசா (அச்சாம்பி)

(யாழ். நிதர்சனன் மின் ஒட்டுத் தொழிலக உரிமையாளர் – வெள்ளை)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 08.10.2024 நாளை செவ்வாய்க்கிழமை காலை 6.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும், வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 10.10.2024 வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

[illegible]ராஜா வீதி,
சண்டிலிப்பாய்.

(396)

தகவல் :
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழலுடன் தொடர்புடையோருக்கு வேட்பு மனுவை வழங்க வேண்டாம்!

**(கொழும்பு)**

**ஊழல் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளோருக்கு எதிர்வரும் பொதுத் தேர்தலில் வேட்பு மனுவை வழங்க வேண்டாம் என மார்ச் 12 இயக்கம் அரசியல் கட்சிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளது.**



அதன் இணைப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

தகுதி வாய்ந்த வேட்பாளர்களை அரசியல் கட்சிகள் பட்டியலில் இணைக்காவிட்டால், மக்களுக்குச் சிறந்த அரசியல் தலைவர்களைத் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பு இல்லாமல் போகும்.

ஊழல், குற்றங்கள் மற்றும் சுற்றாடலுக்குத் தீங்கு விளைவித்தவை உள்ளிட்ட பல குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடையவர்களுக்குத் தேர்தலில் போட்டியிட அரசியல் கட்சிகள் அனுமதிக்கக் கூடாது.

எனவே அரசியல் கட்சிகள் தமது பொறுப்பை உரிய வகையில் நிறைவேற்ற வேண்டும் என ரோஹண ஹெட்டியாராச்சி வலியுறுத்தியுள்ளார். (நி)

## முட்டை விலை மீண்டும் அதிகரிப்பு

(கொழும்பு)


சந்தையில் முட்டை விலை மீண்டும் அதிகரித்துள்ளது.

அதன்படி முட்டை ஒன்றின் விலை 40 ரூபாவை கடந்துள்ளதாக இலங்கை முட்டை வர்த்தக சங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த 3 தினங்களுக்கு முன்னர் முட்டை ஒன்று 30 ரூபாவுக்கும் குறைவான விலையில் விற்பனை செய்யப்பட்டிருந்து. எனினும் சில பகுதிகளில் 45 ரூபாவுக்கு முட்டை விற்பனை செய்யப்படுவதாக மக்கள் குறிப்பிடுகின்றனர்.

உற்பத்தி வீழ்ச்சியடைந்தமையின் காரணமாகவே இவ்வாறு முட்டையின் விலை மீண்டும் அதிகரித்துள்ளதாக இலங்கை முட்டை வர்த்தக சங்கம் தெரிவித்துள்ளது. (நி)

# யாழ்.பல்கலைக்கழகத்தின் அலங்கார நுழைவாயில் திறப்பு







(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பிரதான வாயிலில் அமைக்கப்பட்டுள்ள அலங்கார நுழைவாயில் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறீசற்குணராஜாவினால் நேற்றுக் காலை 10 மணியளவில் நுழைவாயில் திறந்து வைக்கப்பட்டது.

அதனை தொடந்து பல்கலைக்கழக நலச்சேவைகள் கிளையினால் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள சர்வமத நிகழ்வுகள் கைலாசபதி கலையரங்கத்தில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம், இலங்கைப் பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாண வளாகமாக 1974 அக்டோபர் 06 ஆம் திகதி இலங்கையின் அப்போதைய பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்காவினால் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அதன் பொன் விழா நிகழ்வுகள் கடந்த ஓகஸ்ட் மாதம் முதல் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-33)

# 80 வகையான மருந்துகளுக்கு தொடர்ந்தும் தட்டுப்பாடு

## சுகாதார அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் தொடர்ந்தும் 80 வகையான மருந்துகளுக்குத் தட்டுப்பாடு காணப்படுவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. குறித்த மருந்துகளை வைத்தியசாலை மட்டத்தில் கொள்வனவு செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அதன் சிரேஷ்ட அதிகாரியொருவர் குறிப்பிட்டார்.

அதற்கமைய சிக்கல்கள் இன்றி சிகிச்சைகளை முன்னெடுத்துச்செல்ல முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதனிடையே மருந்து பற்றாக்குறை தொடர்பில் பிரதமர், ஹரிணி அமரசூரிய பல்வேறு சந்தர்ப்பங்களில் அதிகாரிகளிடம் வினவியுள்ளதுடன், நோயாளர்களின் உயிர் பாதுகாப்பு தொடர்பில் எவ்வித சிக்கல்களும் ஏற்படாத வகையில் அந்த நடவடிக்கைகளை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லுமாறு ஆலோசனை வழங்கியுள்ளார். (நி)

## ஓய்வு பெறத் தயாராகும் மகிந்த?

(கொழும்பு)

அரசியலில் இருந்து முழுமையாக ஓய்வு பெற முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தீர்மானித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

எதிர்வரும் தேர்தலில் போட்டியிடுவதில்லை என மகிந்த ராஜபக்ஷ தீர்மானித்துள்ள நிலையில் அவர் அரசியலில் இருந்து ஓய்வு தொடர்பான தகவல் வெளியாகி உள்ளது.

சமகால அரசியலில் நிலவும் பாதகமான சூழல், உடல் நிலை, வயது போன்றவற்றை கருத்திற் கொண்டு அவர் இந்த முடிவை எடுத்துள்ளதாக மகிந்தவுக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பாரம்பரிய அரசியல் மீது முன்வைக்கப்பட்ட விமர்சனங்களும் இந்த முடிவிற்கு காரணமாக அமைந்துள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த ஆட்சியின் போது இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு மகிந்த அரசாங்கமே காரணம் என நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# விவசாயத்தை விட்டு விலகும் விவசாயிகள்

(கொழும்பு)

இலங்கையில் ஒரு வருடத்திற்கு 100,000 இற்கும் அதிகமானோர் விவசாயத்துறையில் தமது வேலைகளை விட்டுச் சென்றுள்ளதாகப் பேராசிரியர் வசந்த அத்து கோரல தெரிவித்துள்ளார். மக்கள் தொகை மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் அறிக்கை ஒன்றை வெளியிட்டு மேற்குறித்த விடயத்தினை உறுதிப்படுத்தி உள்ளது.

இந்த நாட்டில் விவசாய துறையில் நிலவும் பல்வேறு பிரச்சினைகளால் விவசாய வேலைகளை விட்டு மக்கள் வெளியேறுவதுடன் நாட்டிற்கு தேவையான விவசாயப் பொருட்களின் உற்பத்தியும் குறைவடைந்து வருகிறது.

இந்நிலை நீடித்தால் நாட்டின் பொருளாதாரம் கடுமையாகப் பாதிக்கப்படும் எனவும் பேராசிரியர் வசந்த அத்து கோரல குறிப்பிட்டுள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டுச் செய்திகள்

# 'தர்மமுழக்கம்' கிரிக்கெட் தொடர்

# கிண்ணத்தை தனதாக்கியது

# தருமபுரம் மத்திய கல்லூரி







கிளிநொச்சி தருமபுரம் மத்திய கல்லூரி மற்றும் கிளிநொச்சி முழங்காவில் மகா வித்தியாலய பாடசாலைகளுக்கிடையிலான 7 ஆவது தர்மமுழக்கம் துடுப்பாட்டத் தொடர் தருமபுரம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நேற்று முன்தினம் இரண்டாவது இறுதிநாள் போட்டியில் தருமபுரம் மத்திய கல்லூரி அணி 170 ஓட்டங்கள் வித்தியாசத்தில் முழங்காவில் மகா வித்தியாலய அணியை வீழ்த்தி கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது.

தருமபுரம் மத்திய கல்லூரி அணி 1ஆவது இனிங்சில் 126 ஓட்டங்களையும் இரண்டாவது இனிங்சில் 170 ஓட்டங்களையும் பெற்றனர்.

முழங்காவில் மகா வித்தியாலய அணியினர். 1ஆவது இனிங்சில் 52 ஓட்டங்களைப்பெற்றனர். 244 ஓட்டங்களால் தருமபுரம் மத்திய கல்லூரி முன்னிலை வகிக்க 245 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற நிலையில் பதிலுக்கு இரண்டாவது இனிங்சில் துடுப்பெடுத்தாடிய முழங்காவில் மகா வித்தியாலய அணி 52.02 பந்து பரிமாற்றங்களில் 74 ஓட்டங்கள் பெற்ற நிலையில் சகல இலக்குகளையும் இழக்க 170 ஓட்டங்களால் தருமபுரம் மத்திய கல்லூரி அணி வெற்றி பெற்றது.

போட்டியின் ஆட்டநாயகனாக தருமபுரம் மத்திய கல்லூரி ஆர்.தமிழ்வாணன், சிறந்த துடுப்பாட்ட வீரராக தருமபுரம் மத்திய கல்லூரி கே.ரொபின்சன், சிறந்த பந்து வீச்சாளராக தருமபுரம் மத் திய கல்லூரி வை.டிசாந்தன், சிறந்த களத்தடுப்பாளராக தருமபுரம் மத்திய கல்லூரி எஸ்.துசாந், சகல துறை வீரராக தருமபுரம் மத்திய கல்லூரி ஆர்.தமிழ்வாணன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (நி-316)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3237

### லெனின்


அதிக ஒலி எழுப்பக்கூடிய மூன்று உயிரினம் பெயரை சொல்லு?



1. பிரசவ வார்டு நர்ஸ்
2. சத்துணவு ஆயா
3. கணக்கு டிச்சர்

### பிரியா

தூங்குவதற்கு முன்பு..
அமெரிக்கா: அம்மா Good night dear
ஹிந்தி அம்மா: Subh Rathri Beta
எங்கம்மா இப்போ: அந்த போனை புடுங்கி உடைக்க போறேன் ஒழுங்கா தூங்கு



### கார்த்தி

பொண்ணுங்க எப்படிடா உன்னை மட்டும் சுத்தி சுத்தி வாறாங்கள்




ஒவ்வொருத்தி கிட்டேயும் 200 ரூபாய் கடன் வாங்கு உன்னையும் சுத்தி சுத்தி வருவாங்க

### சஞ்சய்




### அனுபா

காபி ஷாப்ல இன்றைக்கு உன்னை மாதிரியே ஒரு பெண்ணைப் பார்த்தேன் அப்புறம் என்ன செய்தீங்க?



பயந்து போய் வேற கடையில போய் காபி குடிச்சேன்

### தீபன்

டாக்டர் கிட்ட ரிப்போட் எல்லாத்தையும் காட்டிடியா? டாக்டர் என்ன சொன்னார்?



எனக்கு கேன்சராம் அப்பா லாஸ்ட் ஸ்டேஜ்ல இருக்காம் அப்பா.
இதுலையும் கடைசி தானா இதுல கூட பர்ஸ்ட் வரமுடியல உன்னால

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பல் தொடர்பான நோய்கள் சிறுவர்களிடையே அதிகரிப்பு

(கொழும்பு)

நாட்டில் 5 முதல் 12 வயதுக்குட்பட்ட சிறுவர்களிடையே பல் சார்ந்த நோய் பதிவாகும் வீதம் அதிகரித்துள்ளதாக அண்மைய ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளது.

இதன்படி 10 சிறுவர்களில் 6 பேர் பல் சார்ந்த நோயினால் பாதிக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளதாக பேராதனை பல்கலைக்கழகத்தின் பல் மருத்துவ பீடத்தின் பேராசிரியர் திலீப் டி சில்வா தெரிவித்துள்ளார்.

5 வயது சிறுவர்களில் 63 சதவீதமானோர் பல் நோயினால் பாதிக்கப்படுகின்றனர்.

இது பாரிய பிரச்சினையாகும்.

முன்பள்ளி சிறுவர்களிடையே பல் நோயைக் கட்டுப்படுத்துவது அவசியம்.

எனவே சிறுவர்கள் நாளொன்றுக்கு இரண்டு தடவைகள் பல்துலக்குவதனை பழக்கப்படுத்த வேண்டும்.

இனிப்பு பண்டங்களைத் தவிர்ப்பதுடன், அவற்றினை பிரதான உணவு வேளைகளுக்கு மாத்திரம் வழங்குவதனை உறுதிப்படுத்துமாறும் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பல் மருத்துவ பீடத்தின் பேராசிரியர் திலீப் டி சில்வா வலியுறுத்தியுள்ளார். (நி)

# பொதுத் தேர்தலில் போட்டியிடுவதில்லை

### 30 இற்கும் மேற்பட்ட அரசியல்வாதிகள் தீர்மானம்

(கொழும்பு)

**பொதுத்தேர்தலில் போட்டியிடுவதில்லை என 30இற்கும் மேற்பட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் தீர்மானித்துள்ளனர் என அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.**

ஒன்பதாவது பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவம் செய்தவர்களில் பல அமைச்சர்கள் உட்பட 30இற்கும் அதிகமானவர்கள் எதிர்வரும் தேர்தலில் போட்டியிடுவதில்லை என தீர்மானித்துள்ளனர்.

சிலர் அரசியலுக்கு முற்றாக முழுக்கு போட தீர்மானித்துள்ளனர். சிலர் தேசிய பட்டியல் மூலம் பாராளுமன்றம் செல்லத் தீர்மானித்துள்ளனர்.

இந்தப் பட்டியலில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேன, முன்னாள் சபாநாயகர்கள் சமல் ராஜபக்ஷ, மகிந்த யாப்பா அபயவர்த்தன, முன்னாள் அமைச்சர்கள் ஜோன் செனிவரத்தின, ஜி.எல். பீரிஸ், அலிசப்ரி, பந்துலகுணவர்த்தன, திஸ்ஸ விதாரண வாசுதேவ நாணயக்கார ஆகியோரின் பெயர்கள் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

## திருமலையில் கூட்டிணைந்து போட்டியிட இணங்கியது தமிழரசுக் கட்சி

(திருமலை)


எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் இலங்கை தமிழ் அரசுக் கட்சியும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியும் இணைந்து போட்டியிடுவதற்கு சாதகமான சமிக்ஞை வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை. சோ. சேனாதிராஜா, பொதுச் செயலாளர் வைத்தியர் சத்தியலிங்கம், சுமந்திரன், சிறீதரன், குகதாசன் ஆகியோர் நேற்று முன்தினம் மாலை திருகோணமலை மறை மாவட்ட ஆயர் நோயெல் இம்மானுவேல் ஆண்டகையை நேரில் சந்தித்து உரையாடினார்கள்.

திருகோணமலை மாவடடத்தில் ஒரு தமிழ் பிரதிநிதித்துவத்தினையே தக்க வைத்துக் கொள்ளும் நிலைமைகள் காணப்படுகின்ற நிலையில் தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து போட்டியிட வேண்டும் என்ற அடிப்படையில் திருகோணமலை ஆயர் முயற்சிகளை எடுத்திருந்தார்.

அந்த வகையில், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியையும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியையும் ஒன்றிணைத்து போட்டியிடச் செய்வதற்கான ஆரம்ப கட்டப் பேச்சுக்கள் நிறைவுக்கு வந்திருந்த நிலையில் திருகோணமலை மறைமாவட்ட ஆயர் நோயெல் இம்மானுவேல் ஆண்டகையுடனான சந்திப்பு இடம்பெற்றிருந்தது.

அதனை அடுத்து இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி 4 ஆசனங்களைத் தம் வசம் வைத்துக்கொண்டு மூன்று ஆசனங்களை ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்கு வழங்குவதற்கு இணக்கம் வெளியிட்டுள்ளது. (நி)



தீபச்செல்வன் எழுதிய பயங்கரவாதி நாவல் குறித்த உரையாடல் வெகுசிறப்பாக இடம்பெற்றுள்ளது.

குறித்த உரையாடல் நிகழ்வானது நேற்று முன்தினம் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றுள்ளது. உரையாடலில் நாவல் தொடர்பிலும் ஈழம் குறித்தும் பல ஆரோக்கியமான விடயங்கள் நிகழ்வில் பேசப்பட்டுள்ளது.

நிகழ்வில் மொழிபெயர்ப்பாளர்கள் சரத் ஆனந்தா மற்றும் சிவகுருநாதன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இராசிபலன்

07.10.2024
புரட்டாதி 21, திங்கட்கிழமை
சதுர்த்தி காலை 7.13 மணிவரை
அனுசம் பின்னிரவு 12.27 மணிவரை
சுபநேரம் -12.02-1.32 மணிவரை
இராகுகாலம் -7.32-9.02மணிவரை
சந்திராஷ்டமம்.
ரேவதி, அச்சுவினி

வளவன்




மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், மறதியால் சில தொல்லைகளுக்கு ஆட்படலாம், பயணங்களின் போது நிதானம் அவசியம்.




எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம், தொழிலில் புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம்.




உங்களின் பொறுமைக்கு இன்று பரிசு கிடைக்கும், புதிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், புதிய பொறுப்புக்களும், பதவிகளும் வந்து சேரலாம், வாக்கு மேன்மையுண்டு.




பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்களின் தகுதியை உயர்த்தும், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், இறை வழிபாட்டில் ஆர்வம் கூடும், காரிய அனுகூலமுண்டு.




ஆடம்பரப் பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும் நாள், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.




தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், உறவினர் வழியில் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும், வாகன சுகமுண்டு, சுப விரயங்கள் அதிகரிக்கும் நாள்.




வழிபாடு குதூகலம் தரும், குடும்பத்தினர் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர், விரும்பிய காரியம் விரும்பியபடியே கைகூடும், கற்பனை மிகுதியான நாள்.




நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், தொழில் நலன் கருதி தீட்டிய திட்டங்கள் கைகூடும்,




ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த அச்சுறுத்தல் கள் அகலும், வீட்டை பராமரிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும்.




நேற்றைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், உறவினர்கள் உங்கள் நலனில் அக்கறை காட்ட முற்படுவார்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.




திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், தொழில் நலன் கருதிய பயணங்கள் இடம்பெறலாம், சுப காரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள்.




தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வரவேண்டிய பாக்கிகள் வந்து சேரலாம், அன்பால் சாதித்துக் காட்டும் நாள், பயணங்கள் கைகூடும்.

குடித்தனம் என்று பண்ணினால் நன்மையும் தீமையும் வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக இருதய தினத்தை முன்னிட்டு இடம்பெற்ற விழிப்புணர்வு நிகழ்வு



(யாழ்ப்பாணம்)

உலக இருதய தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஒழுங்கமைத்த துவிச்சக்கர வண்டி ஓட்டும் விழிப்புணர்வு நிகழ்வு நேற்றுக் காலை கொட்டும் மழைக்கும் மத்தியில் சிறப்பாக இடம்பெற்றது.

உடல் ஆரோக்கியத்தை பேணுவதற்கு சைக்கிள் ஓடுவது சிறந்த உடற்பயிற்சியாக அமையும் என்பதை எடுத்துரைக்கும் நோக்குடன் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையினர், தாதியர் பயிற்சி கல்லூரியினர், வட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினர், யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினர், பொலிஸார் எனப் பல அமைப்புக்களைச் சேர்ந்த நூற்றுக் கணக்கானோர் நிகழ்வில் பங்குபற்றினர்.

யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பங்கேற்ற அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன. (நி-33)




# சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய 12 உணவகங்களுக்கு தண்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பருத்தித்துறை நகர் பகுதியில் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய 12 உணவு கையாளும் நிலையங்களுக்கு ஒரு இலட்சத்து 35 ஆயிரம் ரூபாய் தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை நகரசபை பொது சுகாதார பரிசோதகர் தலைமையில் நகர் பகுதியில் உள்ள உணவு கையாளும் நிலையங்களில் திடீர் பரிசோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

அதன் போது சுகாதர சீர்கேடுகளுடனும் மற்றும் சுகாதார நடைமுறைகளை பின்பற்றாத 12 உணவு கையாளும் நிலையங்கள் அடையாளம் காணப்பட்டு அவற்றுக்கு எதிராக பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த வழக்குகள் கடந்த வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, உரிமையாளர்கள் தம் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை ஏற்றுக் கொண்டதை அடுத்து அவர்களை எச்சரித்த மன்று அவர்களுக்கு ஒரு லட்சத்து 35 ஆயிரம் ரூபாய் தண்டம் விதித்தது. (நி-33)

# அரிசியில் தவிட்டுச் சாயம் 20 ஆயிரம் ரூபா தண்டம்

(யாழ்ப்பாணம்)

அரிசியில் செயற்கை தவிட்டுச் சாயம் கலந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆலை உரிமையாளருக்கு 20 ஆயிரம் ரூபாய் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது. சுதுமலை பகுதியில் உள்ள அரிசி ஆலை ஒன்றில் பொது சுகாதார பரிசோதகர் ம. ஜெயபிரதீப் திடீர் பரிசோதனையை மேற்கொண்ட வேளை செயற்கை தவிட்டு சாயங்கள் கலந்த ஒரு தொகை அரிசியினை கடந்த ஓகஸ்ட் மாதம் மீட்டிருந்தார்.

மீட்கப்பட்ட அரிசி மாதிரிகளை மேலதிக பரிசோதனை நடவடிக்கைக்காக அநுராதபுரத்தில் உள்ள அரச பகுப்பாய்வு திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட நிலையில் பரிசோதனையில் அரிசியில் சாயம் கலக்கப்பட்டது உறுதி செய்யப்பட்டது.

அதன் பிரகாரம் குறித்த அரிசி ஆலை உரிமையாளருக்கு எதிராக கடந்த வெள்ளிக்கிழமை மல்லாகம் நீதவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. வழக்கு விசாரணையில் உரிமையாருக்கு 20 ஆயிரம் ரூபாய் தண்டம் விதிக்கப்பட்டது. (நி-33)

# தாழையொடு குளத்தினையும் வீதியையும் புனரமைப்பு செய்யுமாறு கோரிக்கை

(சாவகச்சேரி)

அல்லாரை தெற்கு கிராமத்தையும் மீசாலை கிழக்கு கிராமத்தையும் பிரிக்கின்ற சாவகச்சேரி நகரசபைக்கு உரித்தான எல்லை வீதியையும்-வீதியோடு இணைந்த தாழையொடு துரவு குளத்தினையும் புனரமைத்துத் தருமாறு கிராம மக்கள் சாவகச்சேரி நகர சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக கிராம மக்கள் நகரசபைக்கு அனுப்பிய கோரிக்கைக் கடிதத்தில்

மேற்படி எல்லை வீதியின் ஏனைய பகுதிகள் சிறப்பாக புனரமைக்கப்பட்டுள்ள போதிலும் 150 தொடக்கம் 200மீற்றர் வரையான வீதியின் சிறு பகுதி நீண்ட காலமாக புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகிறது.

அத்துடன் வீதியின் அருகாமையில் காணப்படுகின்ற தாழையொடு துரவு குளமும் எந்தவித பராமரிப்பும் இன்றிக் காணப்படுகின்றது.

இதனால் கிராம மக்கள் மாரி காலத்தில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். மேற்படி வீதியை புனரமைக்கக் கோரி கடந்த 2019 ஆம் ஆண்டு தொடக்கம் கோரிக்கை விடுக்கப்பட்டு வருகிறது.

அத்தோடு வீதியை அண்மித்து உள்ள நகரசபைக்கு சொந்தமான குளமும் எல்லைப்படுத்தப்பட்டு அணைக்கட்டு அமைக்கப்பட்டு தொடர்ந்து பராமரிக்கப்பட வேண்டிய தேவைப்பாட்டில் இருப்பதாக மேலும் அவர்கள் தமது கோரிக்கைக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர். (நி-30)

## நெல்லியடி புடைவையகம்

# தீ வைப்பு தொடர்பில் சந்தேக நபர் கைது

(கரணவாய்)

நெல்லியடி நகரில் உள்ள புடைவையகத்துக்கு தீ வைத்த பிரதான சந்தேக நபர் காங்கேசன் துறை குற்றத் தடுப்பு பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

மேற்படி புடைவையகத்துக்கு இரண்டு தடவைகள் தீ வைக்க முற்பட்ட நிலையில் அது முடியாமல் போயிருந்த நிலையில் மீண்டும் கடந்த இரண்டாம் திகதி இரவு புடைவையகத்துக்கு தீ வைத்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இச் சம்பவத்தின் பிரதான சந்தேக நபரான சுன்னாகம் பகுதியைச் சேர்ந்த 24 வயது உடைய இளைஞர் ஒருவர் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை காங்கேசன் துறைக் குற்ற தடுப்பு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்படும்போது வாள் ஒன்றும் பெற்றோல் குண்டு ஒன்றும் மீட்கப்பட்டிருந்தது. விசாரணைகளை மேற்கொண்டு வரும் நெல்லியடிப் பொலிஸார் விசாரணைகளின் பின்னர் சந்தேக நபரை நீதிமன்றத்தில் முற்படுத்தவுள்ளனர். (நி-60)

# விண்ணப்பம் கோரல்...

(யாழ்ப்பாணம்)

யா/முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தில் கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கலை மற்றும் கைவினை, கலை மற்றும் வடிவமைப்பு, மோட்டார் வாகனத் தொழில்நுட்பக் கல்வி, அலுமினியக் கட்டுமானக் கல்வி, உலோகக் கட்டுமானக் கல்வி, மின் மற்றும் இலத்திரனியல் தொழில்நுட்பக் கல்வி, கிரபிக் வடிவமைப்பு/ கணனி மூல வடிவமைப்பு, கட்டுமானத் தொழில்நுட்பக் கல்வி, சுகாதாரமும் சமூகப் பாதுகாப்பு மற்றும் ஜவுளி மற்றும் ஆடைகள் கல்வி போன்ற கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இக்கற்கை நெறியினை க.பொ.த (சா/த) பரீட்சை அமர்வினை அடிப்படையாகக் கொண்டு (பெறுபேறு அவசியமில்லை) தொடர முடியும். (6)

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழத்தினால் நடத்தப்படும் மனித வள முகாமைத்துவ உயர்தர சான்றிதழ் 2024/ 2025 கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இக்கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் கல்விப் பொதுத் தராதரப் (சாதாரண தரம்) பரீட்சையில் ஒரே அமர்வில் கணிதம் மற்றும் முதல் மொழி உள்ளடங்கலாக ஆறு பாடங்களில் சித்தி அடைந்திருப்பதோடு அவற்றுள் குறைந்தது 2 பாடங்களில் திறமைச்சித்தியினை கொண்டிருத்தல் அல்லது 30 கிரடிற் கொண்ட SLQF நிலை 1 மற்றும் அதற்கு மேற்பட்ட அல்லது இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தினால் நடத்தப்படும் ஏதேனும் சான்றிதழ் கற்கை நெறியினை பூர்த்தி செய்திருத்தல் அல்லது இலங்கை திறந்த பல்கலைக்கழத்தின் மூதவையினால் ஏற்றுக் கொள்ளக்கூடிய பொருத்தமான புலத்தில் NVQF மட்டம் 3 இல் சித்தி அடைந்திருத்தல் அல்லது இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் மூதவையினால் ஏற்றுக்கொள்ளகூடிய சமமான அல்லது உயர் தகைமைகள் கொண்டிருக்க வேண்டும் மற்றும் 18 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பப்படிவங்களை www.ou.ac.lk என்னும் இணையத்தள முகவரியில் பிரவேசித்து 19.10.2024 வரை விண்ணப்பிக்க முடியும்.

மேலதிக விபரங்களிற்கு யாழ்ப்பாணம் பிராந்திய நிலையம் பிறவுண் வீதி கொக்குவில் எனும் முகவரியூடாகவும் மற்றும் 021 222 3374 எனும் தொலைபேசியூடாகவும் தொடர்புகொண்டு விண்ணப்பிக்க முடியும் என யாழ்ப்பாண பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் அரசியல் நெருக்கடிக்கு உள், வெளிநாட்டு காரணிகளே காரணம்

## இந்திய வெளிவிவகார அமைச்சர் சுட்டிக்காட்டு



(டில்லி)

இரண்டு வருடங்களுக்கு முன்னர் இலங்கை முகங்கொடுக்க நேர்ந்த அரசியல் அதிர்ச்சி. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு காரணிகளின் விளைவு என இந்திய வெளிவிவகார அமைச்சர் சுப்ரமணியம் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச அமைதிக்கான அமெரிக்க சிந்தனைக் குழுவான கார்னகி எண்டோவ்மென்ட் ஏற்பாடு செய்த கலந்துரையாடலின் போது அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

உலகின் குறிப்பிட்ட பிராந்தியத்தில் ஏற்படும் மோதல்கள் உலகின் பிற பிராந்தியங்களில் குறிப்பாக தெற்கில் கடுமையான தாக்கங்களை ஏற்படுத்தும் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்நிலையில் இலங்கையிலும் இந்த காரணிகளின் விளைவாகவே கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் அரசியல் அதிர்ச்சி ஏற்பட்டதாக ஜெய்சங்கர் குறிப்பிட்டுள்ளார்.

உக்ரைனிலும் மத்திய கிழக்கிலும் இடம்பெறும் மோதல்கள் காரணமாக உலகளாவிய பதற்றநிலை தோற்றம் பெற்றதாக ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார். (நி)

---

## DISTRICT SECRETARIAT, JAFFNA
## INVITATION FOR BIDS-(IFB 3)

Department Procurement Committee of jaffna district Secretariat called bids by IFB 3 for Vehicle Service for the Vehicles of Jaffna District Secretariat and Divisional Secretariats in Jaffna District. Please see the above mentioned Invitaiton for Bids (IFB 3) in Daily News dated 07.10.2024 or on Jffna District Secretariat website www.jaffna.dist.gov.lk

Chairman,
Department Procurement Committee,
District Secretairat,
Jaffna.

(C-1345)

---

## சாரதிகள் மற்றும் இயந்திர இயக்குநர்களை நாட்கூலி அடிப்படையில் அமர்த்துவதற்கான கூறுவிலை கோரல்-2024
### மாநகர சபை யாழ்ப்பாணம்

மாநகர சபையின் தேவைகருதி **சாரதிகள் மற்றும் இயந்திர இயக்குநர்களை** நாட்கூலி அடிப்படையில் அமர்த்துவதற்கு. அவர்களை எமக்குத் தேவைப்படும் நேரத்தில் வழங்கக்கூடிய நிறுவனங்களிடம் இருந்து கூறுவிலைகள் கோரப்படுகின்றன. இக்கூறுவிலைகளைச் சமர்ப்பிப்பதற்கான கூறுவிலைப் படிவங்களை அலுவலக நேரத்தில் மாநகரச்சபையின் கொள்வனவுக் கிளையில் 07.10.2024 ஆம் திகதி முதல் பெற்று அதனைப் பூர்த்திசெய்து கடித உறையினுள் உள்ளடக்கி உறையின் இடதுபக்க மேல் மூலையில் **'சாரதிகள் மற்றும் இயந்திர இயக்குநர்களை நாட்கூலி அடிப்படையில் வாடகைக்கு அமர்த்துவதற்கான கூறுவிலை- 2024' எனக்குறிப்பிட்டு ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு 22.10.2024 ஆம் திகதி. செவ்வாய்க்கிழமை, முற்பகல் 11.00 மணிக்கு முன்னர் பதிவுத் தபால் மூலமோ அல்லது நேரிலோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.


மாநகரஆணையாளர்,
மாநகரசபை,யாழ்ப்பாணம்.

(C-1346)

---

## சேவைநலன் பாராட்டு

உயர்திரு.
பொன்னுத்துரை
விஜயகுமார்
(ஆசிரியர்)
(BA, Dip.in Edu, SLTS-I)



Best Wishes!

**ஆசிரியர் சேவை விபரம்**

01. யா/மகாஜன கல்லூரி-தெல்லிப்பளை (01.09.1992-02.12.1994)
02. யா/அளவெட்டி அருணாசலம் வித்தியாசாலை (03 நாட்கள்) (01.01.1995-31.12.2005)
03. யா/கட்டுவன்புலம் மகாவித்தியாலயம்-தெல்லிப்பளை (02 நாட்கள்) (01.01.1995-01.08.1996)
04. யா/மல்லாகம் மகாவித்தியாலயம் (02 நாட்கள்) (02.08.1996-01.08.1997)
05. யா/அருணோதயா கல்லூரி-அளவெட்டி (01.01.2006-19.01.2014)
06. யா/புனித ஹென்றியரசர் கல்லூரி-இளவாலை (20.01.2014-01.10.2024)

ஓய்வுக்காலம் சிறப்பாக அமைய வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: ஆசிரியர் நலன்புரிச் சங்கம்,
யா/புனித ஹென்றியரசர் கல்லூரி, இளவாலை.

(2221))

---

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

குருபிரதீபா பிரபா விருதினை பெற்றுக்கொண்ட எமது பாடசாலை அதிபர், ஆசிரியர்களுக்கு மனம் நிறைந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம்



திருமதி.செல்வரஞ்சினி பொன்னம்பலம்
அதிபர் (SLPS-3)
NCOE (merit), DSM (Distriction)
Bachelor.Of.Education



செல்வி.யூலி சிந்துஜா அருட்செல்வராஜா
Bachelor of Education in English Language Teaching



திருமதி.
வசந்தமலர் பாலசுப்பிரமணியம்
பயிற்றப்பட்ட ஆசிரியர்



திருமதி.
ஞானவேல் ரகுபதி
பயிற்றப்பட்ட ஆசிரியர்

Best Wishes!

ஆசிரியர் நலன்புரிக்கழகம்
மு/உடையார்கட்டு அ.த

(C-1344)

---

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/பாஷையூர் சென்.அன்ரனீஸ் றோ.க.மகளிர் வித்தியாலயம்



எமது பாடசாலை வரலாற்றில் முதன் முறையாக பல்கலைக்கழக அனுமதி (2023/2024 )பெற்றுள்ள மாணவி

செல்வி.**விஜிதா அருள்குமரன்**
(Sports Science and Management-University of Jayawardenepura)

Best Wishes



2023 (2024) க.பொ.த (சா/த) பரீட்சையில் 9A தரச்சித்தியை பெற்றுள்ள மாணவி

செல்வி.**அபிஷானா யேசுராசா**

இருவரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்

(2206)

வாழ்த்துவோர்: பாடசாலைச் சமூகம்,
யா/பாஷையூர் சென்.அன்ரனீஸ் றோ.க.மகளிர் வித்தியாலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதம்

## லெபனான் மீதான தாக்குதலை விரிவுபடுத்திய இஸ்ரேல்



(பெய்ரூட்)

காசா மீதான போரை தொடர்ந்து லெபனானில் செயற்படும் ஹிஸ்புல்லா இயக்கத்தினரை குறிவைத்து இஸ்ரேல் தனது தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ளது.

லெபனான் தலைநகர் பெய்ரூட் புறநகர் பகுதிகள், எல்லையில் உள்ள தெற்கு லெபனானில் தொடர்ந்து குண்டுகள் வீசப்பட்டு வருகிறது. மேலும் லெபனானுக்குள் தரைவழித் தாக்குதலை இஸ்ரேல் தொடங்கியுள்ளது. இதில் இஸ்ரேல் படைகளுக்கும், ஹிஸ்புல்லா இயக்கத்தினருக்கும் சண்டை நடந்து வருகிறது. இஸ்ரேல் தாக்குதலால் லெபனானில் சுமார் 12 லட்சம் பேர் இடம் பெயர்ந்துள்ளனர்.

இந்த நிலையில் லெபனான் மீதான தாக்குதலை இஸ்ரேல் விரிவுபடுத்தியுள்ளது. அதன்படி பெய்ரூட்டின் தெற்கு புறநகர்ப் பகுதிகளை குறிவைத்து வான் வழித் தாக்குதல்கள் நடத்தப்பட்டது. இதில் சரமாரியாக குண்டுகள் வீசப்பட்டன. மேலும் லெபனானின் வடக்கு பகுதியில் முதல் முறையாக தாக்குதல் நடத்தியது. வடக்கு பெடாவியில் உள்ள அகதிகள் முகாம் மீது குண்டுகள் வீசப்பட்டன.

இதேபோல் லெபனானின் கிழக்கு பெக்கா பள்ளத் தாக்கிலும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. லெபனானின் எல்லைப் பகுதிகளில் தாக்குதல் நடத்தப்பட்டு வந்த நிலையில் தற்போது வடக்கு பகுதியிலும் இஸ்ரேலின் தாக்குதல் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. (நி)

## இஸ்ரேலுக்கான ஆயுதங்களை நிறுத்தியது பிரான்ஸ்



(பாரிஸ்)

"இஸ்ரேலுக்கு ஆயுதங்கள் வழங்குவதை பிரான்ஸ் நிறுத்திவிட்டது. மற்ற நாடுகளும் ஆயுதம் வழங்குவதை நிறுத்திக் கொள்ள வேண்டும்" என பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல் மக்ரோன் தெரிவித்தார்.

காசா, லெபனான், ஹவுதி படையினர் மீது இஸ்ரேல் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது. இதனால் மேற்கு ஆசியாவில் பதற்றம் நிலவுகிறது. இஸ்ரேலுக்கு அமெரிக்கா முழு ஆதரவு அளித்து வருகிறது. இந்நிலையில், இஸ்ரேலுக்கு ஆயுதங்கள் வழங்குவதை பிரான்ஸ் நிறுத்தி உள்ளது. இது குறித்து அந்நாட்டு ஜனாதிபதி மக்ரோன் கூறியதாவது.

காசாவில் இஸ்ரேல் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருவதற்கு தீர்வு காண வேண்டும். இஸ்ரேலுக்கு ஆயுதங்கள் வழங்குவதை பிரான்ஸ் நிறுத்திவிட்டது. மற்ற நாடுகளும் ஆயுதம் வழங்குவதை நிறுத்திக் கொள்ள வேண்டும். போரை நிறுத்த மற்ற நாடுகளும் இதனை முன்னெடுக்க வேண்டும்.

போர் தொடர்ந்து நடப்பதை தடுப்பதே இப்போது எங்களின் எண்ணம். தற்போது லெபனானில் இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருகிறது. லெபனான் மற்றொரு காசாவாக மாறக் கூடாது என அவர் தெரிவித்தார்.

பிரான்ஸ் பாதுகாப்பு துறை அறிக்கையின் படி, "கடந்த ஆண்டு மட்டும் 30 மில்லியன் யூரோக்கள் மதிப்பு உள்ள ஆயுதங்களை இஸ்ரேலுக்கு பிரான்ஸ் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# அணுசக்தி த

# முதலில் தா

## இஸ்ரேலுக்கு ட்ரம்ப் அறி

(வோஷிங்டன்)

**உலகிலே அதிக ஆபத்தானது அணு ஆயுதா அணுசக்தித் தளங்களை முதலில் தாக்குங்க அறிவுரை வழங்கினார் அமெரிக்க முன் டொனால்ட் ட்ரம்ப்.**

பாலஸ்தீனம் மற்றும் லெபனான் மீது இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதலுக்கு பதிலடியாக கடந்த செவ்வாய்க்கிழமை இரவு சுமார் 400 ஏவுகணைகளை இஸ்ரேல் மீது ஈரான் ஏவியது. இந்தத் திடீர் தாக்குதலால் நிலை தடுமாறிய இஸ்ரேல் பதில் தாக்குதலுக்கு அமெரிக்காவுடன் சேர்ந்து திட்டம் தீட்டி வருகிறது. ஈரானின் எண்ணெய் வயல்களையும், அணு உலையையும் தாக்கும் திட்டமும் இஸ்ரேலிடம் உள்ளது.

அதனால் ஏற்படும் விளைவுகளால் அமெரிக்கா அதை ஆமோதிக்க தயக்கம் காட்டுகிறது. வெள்ளை மாளிகையில் கடந்த வெள்ளிக்கிழமை பேசிய ஜனாதிபதி பைடனும் ஈரான் அணு உலையை தாக்குவதற்கு பதிலாக வேறு வழிகளை யோசிக்க வேண்டும் என்று தெரிவித்திருந்தார். ஆனால் அமெரிக்க முன்னாள் ஜனாதிபதியும் வரும் நவம்பர் 5 ஆம் திகதி நடக்கும் ஜனாதிபதித் தேர்தலில் குடியரசுக் கட்சி சார்பில் போட்டியிடுபவருமான ட்ரம்ப் மாறுபட்ட கருத்தை வலியுறுத்தியுள்ளார்.

தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்ட ட்ரம்ப் பேசியதாவது, ஈரானை தாக்கலாமா என்று ஜோ பைடனிடம் கேள்வி கேட்கப்பட்டது. அவர்கள் நமது அணு சக்தியை தாக்காத வரையில் நாம் தாக்க வேண்டாம் என்று பைடன் கூறுகிறார்.

அவர் இந்த விடயத்தில் தவறான புரிதலுடன் இருக்கிறார். நீங்கள் தாக்குதல் நடத்த வேண்டியதே அணு சக்தி மீதுதான். அணு




(ஜெருசலேம்)

ஹமாஸ் அமைப்பு இஸ்ரேல் மீது தாக்குதலை மேற்கொண்டு ஒரு வருடமாகின்ற நிலையில் ஹமாஸ் அமைப்பினால் பணயக் கைதிகளாக பிடிக்கப்பட்டவர்களை விடுவிப்பதற்காக பெஞ்சமின் நெதன்யாகு அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுக்காதமைக்கு எதிர்ப்பு தெரிவித்து இஸ்ரேலின் பல நகரங்களில் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றுள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தளங்களை ாக்குங்கள்!

## றிவுரை

**துங்கள். எனவே ஈரான் ங்கள் என இஸ்ரேலுக்கு ன்னாள் ஜனாதிபதி**



ஆயுதங்கள் தானே உலகிலேயே அதிக ஆபத்துடைய ஒன்று. எனவே முதலில் அணு சக்தியை தாக்குங்கள், அதன்பிறகு மற்றதைப் பற்றி கவலைப்படுங்கள். ஈரான் அணு ஆயுதத்தைப் பயன்படுத்த திட்டமிட்டிருந்தால் நிச்சயம் பயன்படுத்தியே தீர்வார்கள் என்று இஸ்ரேலுக்கு ட்ரம்ப் அறிவுரை வழங்கியுள்ளார்.

ஈரானில் ஒரே ஒரு அணு சக்தி நிலையம் செயற்பட்டு வருகிறது. இங்கு அணு உலை உள்ளிட்ட அணுசக்தி சார்ந்தவை இயங்கி வருகின்றன. தலைநகர் டெஹ்ரானுக்கு தெற்கே 300 கிலோ மீற்றர் தொலைவில் ஐஸ்பஹான் நகரில் வளை குடா கடற்கரை அருகே அந்த அணுசக்தி நிலையமானது செயற்பட்டு வருகிறது. ரஷ்யாவுடன் இணைந்து கடந்த 1992 ஆம் ஆண்டு இந்த அணு உலை உருவாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி)

# ஈரானுக்கு தக்க பதிலடி தயாராகும் இஸ்ரேல்



(ஜெருசலேம்)

இஸ்ரேலுக்கு எதிரான ஈரானிய ஏவுகணை தாக்குதலுக்கு இஸ்ரேலிய இராணுவம் “பதிலடி கொடுக்க தயாராகி வருகிறது” என்று இஸ்ரேலிய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தனது பெயரை வெளியிட விரும்பாமல் பேசிய இஸ்ரேல் இராணுவ அதிகாரி, பதிலடியின் தன்மை அல்லது தாக்குதலுக்கான நேரம் குறித்த கூடுதல் விவரங்களை வழங்கவில்லை.

செப்ரெம்பர் 27 அன்று பெய்ரூட்டில் ஹிஸ்புல்லா அமைப்பின் தலைவர் ஹசன் நஸ்ரல்லா கொல்லப்பட்டது உட்பட அந்த அமைப்பை குறிவைத்து சரமாரியாக இஸ்ரேல் வான்வழித் தாக்குதல்களை நடத்தி வருகிறது.

ஈரானிய தாக்குதலுக்கான “விளைவுகள்” குறித்து இஸ்ரேல் முன்னரே எச்சரித்துள்ளது மற்றும் அமெரிக்காவுடன் சாத்தியமான பதிலடி குறித்து விவாதித்துள்ளது.

இதேவேளை இஸ்ரேல் மீது ஈரானின் ஏவுகணைத் தாக்குதலுக்கு தேர்ந்தெடுக்கும் இடம் மற்றும் நேரத்தில் தக்க பதிலடி கொடுக்கப்படும் என்று இஸ்ரேலிய படைத்துறை தெரிவித்துள்ளது.

இதனிடையே “உலகில் எந்த நாடும் தனது நகரங்கள் மற்றும் குடிமக்கள் மீது இதுபோன்ற தாக்குதலை ஏற்காது. இஸ்ரேலும் அதை ஏற்றுக்கொள்ளாது என ஈரானின் ஏவுகணைத் தாக்குதலைப் பற்றி உரையாற்றிய இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்தார்.

“இஸ்ரேலுக்கு தன்னைத்தானே தற்காத்துக் கொள்ளவும் இந்தத் தாக்குதல்களுக்குப் பதிலடி கொடுக்கவும் கடமையும் உரிமையும் உள்ளது - நாங்கள் அவ்வாறு செய்வோம்” எனவும் அவர் தெரிவித்தார். (நி)

# அரசியல் எதிர்காலத்திற்காக ுத்தத்தை முன்னெடுக்கிறார் நெதன்யாகு!

## ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுப்பு




ளன.

காசாவில் தொடர்ந்தும் சிக்குண்டுள்ள பணயக் கைதிகளை விடுவிப்பதற்காக மேலும் நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என ஆர்ப்பாட்டக்காரர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இஸ்ரேலிய தலைநகர் உட்பட பல நகரங்களில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டுள்ள பணயக்கைதிகளின் உறவினர்கள் பணயக்கைதிகளை விடுதலை செய்வதற்கு மேலும் தீவிர நடவடிக்கைகள் அவசியம் என மன்றாட்டமாக வேண்டு கோள்விடுத்துள்ளனர்.

இஸ்ரேலின் கேசரியாவில் உள்ள பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் தனிப்பட்ட இல்லத்தின் முன் [illegible] ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றுள்ளன. (நி)

# குதிரைப்பந்தயத்துக்கு ‘குட் பாய்’ சொன்னது சிங்கப்பூர்



(சிங்கப்பூர்)

சிங்கப்பூரில் 182 ஆண்டுகளாக நடந்து வந்த குதிரைப்பந்தயம் முடிவுக்கு வந்துள்ளது.

சிங்கப்பூர் முன்பு பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் மலேசியாவுடன் ஒன்றிணைந்த நாடாக இருந்தது. அப்போது 124 ஹெக்டேயர் பரப்பில் பரந்து விரிந்த குதிரைப் பந்தய மைதானம் அமைக்கப்பட்டது. இந்த மைதானத்தில் 182 ஆண்டுகளாக தொடர்ந்து குதிரைப் பந்தயம் நடந்து வந்தது.

இந்நிலையில் தனி நாடாகி அசுர வளர்ச்சி பெற்றுள்ள சிங்கப்பூருக்கு நிலம் தேவைப்பட்டது. மண் கொட்டி, கடல் பரப்பை மேடாக்கி, நிலப்பரப்பை ஏற்படுத்தி அந்நாட்டு அரசு கட்டடங்களை கட்டி வந்தது. வீட்டு வசதி திட்டங்களுக்கு, வேறு என்ன காலி இடங்களை பயன்படுத்த முடியும் என்று ஆராய்ந்து, குதிரைப்பந்தய மைதானத்தை பயன்படுத்த முடிவு செய்தனர்.

அதன்படி மைதான நிலத்தை அரசு எடுத்துக் கொள்கிறது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேர்தலில் ஒன்றிணையும் நோக்கில் மொட்டு- மக்கள் ஐக்கிய முன்னணி

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் சிறிலங்கா பொதுஜன பெரமுனவுடன் இணைந்து போட்டியிடுவது குறித்து முன்னாள் பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையிலான மக்கள் ஐக்கிய முன்னணி கலந்துரையாடல்களை ஆரம்பித்துள்ளது.

இதன் படி, அவருக்கும் சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசத்துக்கும் இடையில் முதலாவது கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த கலந்துரையாடலின் போது, மாகாணசபை, உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் மற்றும் பொதுத் தேர்தல் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டதாக பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், தற்போதைய அரசியல் நிலவரங்கள் மற்றும் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் எதிர்காலத்தில் மேலும் பல சுற்றுக் கலந்துரையாடல்கள் இடம்பெறவுள்ளதாகவும் காரியவசம் தெரிவித்துள்ளார்.

எனினும் கட்சியின் கொள்கைகளை முன்னெடுப்பதற்காக மாத்திரமே புதிய கூட்டணிகள் உருவாக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், பொதுத் தேர்தலுக்கான சிறிலங்கா பொதுஜன பெரமுனவினால் வேட்புமனுத்தாக்கல் செய்வதற்கான நேர்காணல்கள் இடம்பெற்றுவருகிறது. (நி)

## உ.கிழங்கு - வெங்காயத்திற்கான வரி அதிகரிப்பு

(கொழும்பு)

ஒரு கிலோகிராம் உருளைக்கிழங்கு மீதான விசேட இறக்குமதிவரியை 10 ரூபாவினால் அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஒரு கிலோக்கிராம் பெரிய வெங்காயத்திற்கான வரியை 20 ரூபாவால் அதிகரிப்பதற்கு நிதி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கமைய உருளைக்கிழங்கு மீதான விசேட இறக்குமதி வரி 50 ரூபாவில் இருந்து 60 ரூபாவாகவும் பெரிய வெங்காயத்திற்கான வரி 10 ரூபாவில் இருந்து 30 ரூபாவாக அதிகரிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதனால், இறக்குமதி செய்யப்படும் உருளைக்கிழங்கு மற்றும் பெரிய வெங்காயத்தின் விலைகள் அதிகரிக்கக் கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது. (நி)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | நெல்லியடி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 140 | 140 | 160 | 130-170 | 150 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 180 | 165 | 200 |
| பச்சைமிளகாய் | 240 | 200 | 200 | 200-250 | 300 |
| தக்காளி | 300 | 250 | 400 | 200 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 140 | 200 | 150-180 | 200 |
| கோவா | 200 | 250 | 200 | 260 | 250 |
| கரட் | 180 | 200 | 250 | 200 | 250 |
| பூசணி | 80 | 60 | 80 | 50 | 100 |
| புடோல் | 60 | 140 | 100 | 150 | 300 |
| வாழைக்காய் | 180 | 150 | 200 | 120-150 | 250 |
| சின்ன வெங்காயம் | 350 | 350 | 300 | 150-300 | 400 |
| பெரிய வெங்காயம் | 280 | 200 | 250 | 280 | 300 |
| பாகற்காய் | 550 | 450 | 450 | 400 | 400 |
| வெண்டக்காய் | 160 | 150 | 100 | 150 | 200 |
| கருணைக் கிழங்கு | 140 | 150 | 200 | 150 | 240 |
| பயற்றங்காய் | 300 | 300 | 300 | 250-300 | 400 |
| லீக்ஸ் | 260 | 300 | 300 | 250 | 320 |
| பீற்றூட் | 100 | 150 | 200 | 150 | 200 |
| கறிமிளகாய் | 400 | 450 | 450 | 400 | 600 |
| முருங்கைக்காய் | 600 | 400 | 300 | 200-300 | 300 |
| போஞ்சி | 350 | 450 | 450 | 300 | 500 |
| கத்தரிதம்புள்ள | 100 | 100 | 180 | -- | 120 |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 150 | 80 | 120 |
| தேசிக்காய் | 400 | 350 | 450 | 300-400 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 150 | 130 | 80-140 | 100-150 |
| இராசவள்ளி | -- | 900 | 1500 | 580 | 1200 |
| வெங்காயப்பூ | 350 | 450 | 450 | -- | 400 |
| முள்ளங்கி | 100 | 120 | 120 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 60 | 120 | 80 | 60 |
| வல்லாரை | 60 | 30 | 80 | 100 | 100 |
| ஈரப்பலா | 100 | -- | 100 | -- | 150 |

## இன்று ஒரு தகவல் 234



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

## அக்னி ஹோத்ரம்

ஒரு டிசம்பர் மாதம் இரண்டாம் திகதி நடுராத்திரி நேரம் மணி 1.30. எஸ்.என்.குஷ்வானா என்று ஒரு 45 வயது ஆசிரியர். அவர் மனைவி திரிவேணி என்று பெயர். 36 வயது. அவர் ஏதோ வாந்தி எடுக்கிற மாதிரி ஒரு சத்தம்.

அந்த ஆசிரியர் முழித்துக் கொண்டார். சிறிது நேரத்திலே அவர் குழந்தைகளும் பலமாக இரும ஆரம்பித்து விட்டார்கள். கடுமையான நெஞ்சுவலி, கண்களிலே எரிச்சல், மூச்சு விட முடியாத ஒரு திணறல். அவர்கள் யாருக்கும் என்ன என்று ஒன்றும் புரியவில்லை. வீட்டை விட்டு வெளியிலே வந்தார்கள். அங்கே பார்த்தால் ஆயிரக்கணக்கான ஜனங்கள் பீதியோடு தெருவிலே ஓடிக்கொண்டு இருந்தார்கள். அப்படி ஓடிக்கொண்டு இருந்ததில் ஒருவர் செல்லும் போது ஒரு விடயத்தை சொல்லிவிட்டு ஓடினார்

ஒரு மைல் தூரத்திலே இருக்கின்ற தொழிற்சாலையிலே விஷவாயு கசிவு ஏற்பட்டு இருக்கிறது. இங்கே இருந்தால் உயிரிற்கு ஆபத்து. அதுதான் ஓடுகின்றோம் என்று சொல்லி விட்டு ஓடினார். உடனே சரி நாமும் புறப்பட்டு போக வேண்டியது தான் என்று அந்த ஆசிரியர் முடிவு செய்தார். ஆனால் அவர் மனைவி இன்னொரு யோசனை சொன்னார். நாம் ஏன் ஓட வேண்டும்? அக்னி ஹோத்திரத்தை ஆரம்பித்தால் என்ன என்றார்.

தீயை உண்டாக்கி அதிலே ஏதேதோ போட்டு எரித்து ஹோமம் வளர்க்கிறார்களே அது தான் அக்னி ஹோத்ரம்! அது ஏற்கனவே அந்தக் குடும்பத்திற்கு பழக்கமான ஒன்று.உடனே அவர்கள் ஹோம தீயை வளர்க்க ஆரம்பித்தார்கள். ஆரம்பித்து ஒரு இருபது நிமிடத்திற்குள்ளே விஷவாயு பாதிப்பு அந்த வீட்டை விட்டு விலகி போய்விட்டது.

எம்.எஸ். ரதோரே என்று ஒருவர் வயது 33. அவர் அவருடைய மனைவி, நான்கு குழந்தைகள், அவரது தாயார் சகோதரர். போபால் புகையிரத நிலையத்திற்கு அருகில் அவர்களது வீடு. ஐந்து வருடகாலமாக அக்கினி ஹோத்திரத்தை ஒரு தினசரி நியமமாக செய்து கொண்டு வருகிறார். அன்று நடுராத்திரியில் அதைச் செய்தார். அதைத் தொடர்ந்து த்ரயம்பக ஹோமத்தையும் செய்தார்.

அந்தக் குடும்பமும் அதைச் சுற்றியிருக்கிற சில குடும்பங்களும் விஷவாயு பாதிப்பில் இருந்து தப்பித்துக் கொண்டார்கள். அக்கினி ஹோத்திரம் என்றால் என்ன? வேதங்களிலே யாகத் தீயை பற்றியெல்லாம் சொல்லி இருக்கிறார்களே? அதே மாதிரி சிறு அளவிலே செய்வது இது. வெளிநாட்டு விஞ்ஞானிகள் இப்போது இதைப்பற்றி எல்லாம் ஆராய்ச்சி செய்கிறார்கள்.

பார்ரிராத்னா என்று ஒருவர் அமெரிக்கா நாட்டவர். இவர் ஒரு விஞ்ஞானி. மனையியல் நிபுணர். புனே சர்வகலாசாலையிலே இவர் அக்கினி ஹோத்திரம் பற்றி ஆராய்ச்சி செய்தார். அவர் என்ன சொல்லுகிறார் என்றால் அக்கினி ஹோத்திரம் என்கின்ற சிறு யாகத்தீ நமது சுற்றுப்புறச் சூழலிலே சில குறிப்பிட்ட நல்ல பலனை ஏற்படுத்துகிறது. மனித மன நிலையிலே குறிப்பிட்ட ஆரோக்கிய விளைவுகளை ஏற்படுத்துகிறது. இந்த மாதிரி குணப்படுத்துகிற சில நற்பலன்கள் நமது பழங்காலத்து ஆயுர்வேதத்திலே சொல்லியிருக்கிறது என்றார்.

நமது ஊரில் ஆயுர்வேதத்தில் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்பதை அமெரிக்காவிலே இருந்து ஒருவர் வந்து படித்து விட்டு சொல்லவேண்டியிருக்கிறது. இன்றைக்கு உலகத்தில் பல இடங்களிலேயும் இந்த யாகத்தீ வளர்ப்பு சம்பந்தமாக சொல்லிக்கொடுத்து கொண்டே இருக்கிறார்களாம். அமெரிக்கா, சிலி என்கிற இலத்தீன் நாடு, போலந்து, மேற்கு ஜேர்மனி இங்கேயெல்லாம் இது பரவியிருக்கிறது. அமெரிக்காவிலே பால்டிமோர் என்கிற இடத்திலே 1978 செப்ரெம்பர் 9 ஆம் திகதியில் இருந்து யாகத்தீ தொடர்ந்து எரிந்து கொண்டு இருக்கிறது. அதே போல் வர்ஜீனியா மாநிலத்திலே மாடிசன் என்கிற இடத்தில் ஒரு நெருப்புக் கோவில் இருக்கிறது. அங்கேயும் அக்னி ஹோத்திரம் செய்கிறார்கள். அதை வேதத் தீ என்று சொல்லுவார்கள். இன்றைக்கு அமெரிக்காவிலே Pollution மிகவும் குறைவாக உள்ள இடம் இதுதான் சிலி நாட்டிலே ஆன்டெஸ் மலைப் பகுதியில் ஒரு தீக்கோயில் இருக்கிறது. வேத முறைப்படி அங்கே யாகம் வளர்க்கிறார்கள். ஏராளமான நோயாளிகள் அங்கே வந்து தங்கி குணமாகி போகிறார்கள். போலந்தில் அக்னி ஹோத்திரத்தை ஒரு விஞ்ஞான அணுகு முறையில் கையாள்கின்றார்கள். 17இடங்களிலே ஹோமோதெரபி சென்டர்கள் நிறுவியிருக்கிறார்கள். இந்த யாகத்தீ வளர்க்கும் பொழுது அதில் இருந்து சாம்பல் கிடைக்கிறது அல்லவா அதை எடுத்து ஆராய்ச்சி செய்து இருக்கிறார்கள். இது பல வெளிநோய்களை குணப்படுத்துகிறது என்பதை மேற்கு ஜேர்மனியில் கண்டுபிடித்து இருக்கிறார்கள்.

பல நாடுகளிலே அக்னி ஹோத்திரத்தின் விளைவாக விவசாய அறுவடை 80 சதவீதம் அதிகரித்து இருப்பதாக சொல்லுகிறார்கள். நம்புவதற்கு கஷ்ரமாகத் தான் இருக்கிறது. அக்னி ஹோத்ரம் செய்வதற்கு என்னென்ன வேண்டும் தெரியுமா? ஒரு சின்ன பிரமிட் மாதிரி அடைப்பு உள்ள செப்புப் பாத்திரம், வறட்டிகள், சுத்தமான நெய், கொஞ்சம் அரிசி அவ்வளவு தான். அரிசியிலே இருக்கிற சில இரசாயணப் பொருள் காரணமாகத்தான் அதை இதற்குத் தேர்ந்து எடுத்தார்கள். வறட்டியிலே கிருமிநாசினிகள் இருக்கிறது. செப்பு உலோகத்தினாலே பல நன்மை இருக்கிறது என்பது பழங்காலத்தில் இருந்து அனுபவ பூர்வமாக தெரிந்து கொண்ட உண்மை. அக்னி ஹோத்ரம் செய்யும் போது சூரிய உதயம், சூரிய அஸ்தமனம் இதை முக்கியமாக கவனத்தில் வைத்துக் கொள்வார்கள்.


இந்தக் காலத்தில் பலர் மிகவும் சாதாரணமாக நினைக்கிற பல விடயத்திலே நிஜமாகவே நிறைய அர்த்தம் இருக்கும் போல இருக்கிறது. ஆனால் நமஸ்காரம் இப்போது எப்படி அக்னி ஹோத்ரம் செய்து கொண்டு இருக்கின்றோம்.

கட்டடத்திற்கு தீ வைப்பது, காரிற்கு தீ வைப்பது, அப்பாவி மக்களை குடிசையிலே அடைத்து அதற்கு தீ வைப்பது இது தான் இப்போது நடந்து கொண்டு இருக்கிறது.

ஒரு திருமணவீட்டிலே, பொண்ணு வீட்டுக்காரர்கள் மாப்பிள்ளை இப்போது என்ன செய்து கொண்டு இருக்கிறார்கள் என்று கேட்டார்கள். அக்னி ஹோத்ரம் செய்து கொண்டு இருக்கிறார் அந்த அறையிலே என்று சொன்னார்கள். இவர்களுக்கு மிகவும் சந்தோஷம். உடனே அந்த அறையிலே போய் எட்டிப் பார்த்தார்கள். அவர்கள் சொன்னது நிஜயம் தான். அந்த மாப்பிள்ளை சிகரெட்டை பற்ற வைத்து புகையை விட்டுக் கொண்டு இருந்தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசமிகளால் தீக்கிரைக்குள்ளான வீடு, மோட்டார் சைக்கிள்



(வவுனியா)

முள்ளியவளை பிரபல பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர் ஒருவரின் மோட்டார் சைக்கிள், வீடு என்பன தீக்கிரையாக்கப்பட்ட சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் பற்றி தெரிய வருவதாவது, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவர் முல்லைத்தீவு முள்ளியவளை பகுதியில் தங்கியிருந்த வீடு மற்றும் ஆசிரியரின் மோட்டார் சைக்கிள் என்பன இனம் தெரியாத நபர்களால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.



சக ஆசிரியர்களின் உதவியுடன் தீ கட்டுக்குள் கொண்டு வரப்பட்ட போதும், ஆசிரியர் தங்கியிருந்த வீடு பகுதியளவில் எரிந்துள்ளது. மோட்டார் சைக்கிள் பாவிக்க முடியாத வகையில் முழுமையாக எரிந்து நாசமாகியுள்ளது.

குறித்த ஆசிரியர் யாழ் சென்ற நிலையில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-299)

# ஐஸ், ஹெரோயினுடன் இளம் குடும்பஸ்தர் கைது

(முல்லைத்தீவு)

தேராவில் பகுதியில் ஐஸ் போதைப் பொருளை தம்வசம் வைத்திருந்த இளம் குடும்பஸ்தர் ஒருவரை நேற்று முன்தினம் கைது செய்துள்ளதாக புதுக்குடியிருப்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தேராவில் தேக்கங்காடு பகுதியில் சட்டவிரோத் செயற்பாடுகள் இடம்பெற்று வருவதாக புதுக்குடியிருப்பு பொலிஸாரிற்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலையடுத்து திடீர் சுற்றிவளைப்பு நடவடிக்கையினை பொலிஸார் மேற்கொண்டனர்.

3 கிராம் 10 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளும் 430 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருளுடனும் தேராவில் பகுதியினைச் சேர்ந்த 38 வயதுடைய குடும்பஸ்தரை கைது செய்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் நேற்றைய தினம் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். (நி-299)

# தபால்பெட்டி சின்னத்தில் சிறிரெலோ தனித்து போட்டி

(வவுனியா)

வன்னித் தேர்தல் தொகுதியில் சிறிரெலோ கட்சி தனித்து போட்டியிடவுள்ளதாக அக்கட்சியின் செயலாளர் நாயகம் ப.உதயராசா தெரிவித்துள்ளார்.

வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களை உள்ளடக்கிய வன்னித் தேர்தல் தொகுதியில் துடிப்புள்ள இளம் மற்றும் திறமை வாய்ந்த வேட்பாளர்களுடன் சிறிரெலோ கட்சி ஜனநாயக தேசியக் கூட்டணிக் கட்சியின் தபால்பெட்டி சின்னத்தில் போட்டியிடுகின்றது எனத் தெரிவித்துள்ளார். (நி-250)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

**Botanical name- Achras Sapota**
**Family- Sapotaceae**

## சீமை இலுப்பம் பழம்/ சப்போட்டா



சப்போட்டா என அழைக்கப்படும் பழ மரமானது மருத்துவப் பண்புகள் நிறைந்த சீமை இலுப்பைப் பழமாகும். எமது பிரதேசத்தில் வளரக்கூடிய மண்வளத்தை கொண்டுள்ளது.

எமது உடலிற்கு நல்ல சக்தியையும் வலுவையும் கொடுக்கக் கூடிய பழமாகும். கர்பிணிப் பெண்களுக்கு இது சிறந்த பழமாகும். இப் பழத்தை சாப்பிடும் போது வாந்தி குணமாகும். நிறைந்த சக்தியைக் கொடுக்கக் கூடிய பழமாகும். இப் பழத்தில் குளுக்கோசு சக்தி மற்றும் கலோரி அதிகமாகக் காணப்படுவதால் உடலுக்கு சக்தியை கொடுக்கக் கூடியதாக இருக்கும். நார்ச்சத்தும் நிறைந்துள்ளது. அதை விட உயிர்ச்சத்து A,C,E, செப்புச்சத்து, கல்சியம், பொஸ்பரஸ், போலேற்று, இரும்புச்சத்து போன்றனவும் காணப்படும்.

ஒரு சப்போட்டாப் பழத்தில் கிட்டத்தட்ட 9 கிராம் நார்ச்சத்து காணப்படும். மலக்கட்டு குணமாகும். இதை மக்னீசியம், உயிர்ச்சத்து B6 காணப்படுவதால் சிறுநீரகக் கற்கள் உருவாகமால் தடுக்கக் கூடியது. கண்பார்வைக்கு சிறந்த பலனைக் கொடுக்கும். என்புகளைப் பலப்படுத்தக் கூடியது. நோய் எதிர்ப்பு ஆற்றலை அதிகரிக்கச் செய்யும். ஒரு நாளைக்கு இரண்டு சிறிய பழங்கள் அல்லது ஒரு அளவான பழம் சாப்பிடலாம்.

இப்பழத்தில் இருந்து பெறப்படும் பாலிலிருந்து ஒரு வகைப் பிசினைச் சேகரித்து சுவிங்கம் செய்யப் பயன்படுத்துவார்கள். சிலருக்கு இப்பழத்தில் காணப்படும் பால் ஒவ்வாமையை ஏற்படுத்தும், அவர்கள் மட்டும் இப்பழத்தை தவிர்த்துக் கொள்ளல் வேண்டும். இப் பழத்தில் காணப்படும் நார்ச்சத்துக்கள் மற்றைய உயிர்ச்சத்துக்கள், கனிமங்களினால் செரிமானத்தை சீராக்கும். மலச் சிக்கலை நீக்கக்கூடியது. உணவுக் கால்வாய்த் தொகுதியின் செயற்பாட்டை சீராக்கக் கூடியது.

குடலில் நல்ல பக்றீரியாக்களின் செயற்பாட்டை தூண்டி ஆரோக்கியமான உணவுக் கால்வாய்த் தொகுதி செயற்பாட்டை பேணக்கூடியதாக இருக்கும். இப்பழங்களை சீராக எடுத்து வர என்புகளின் அடர்த்தியை ஆரோக்கியமாக பேண உதவும். இதில் காணப்படும் இரும்புச்சத்து குருதிச்சோகை வராமல் தடுக்கக் கூடியதாக இருக்கும்.

மனஅழுத்தத்தை குறைக்கக் கூடிய சாத்வீக தன்மை கொண்ட பழமாகும். இதில் காணப்படும் மா, நுண் போசனைக் கூறுகள் மூளை வளர்ச்சியையும் ஞாபக சக்தியையும் கொடுக்கக்கூடிய பழமாகும். இப்பழத்தில் காணப்படும் உயிர்ச்சத்து E, A, C, செப்புச்சத்து போன்றவை தலைமுடி உதிராமல் ஆரோக்கியமாக பேண உதவும் அளவிற்கு அதிகமான சப்போட்டா பழங்களைச் சாப்பிடுவதையும் தவிர்க்க வேண்டும். ஏனெனில் வயிற்றில் அசௌகரியத்தையும் வேதனையையும் உண்டு பண்ணலாம்.

ஏனெனில் இதில் காணப்படும் நார்ச்சத்து குடலில் நமைச்சலை ஏற்படுத்தும். சில இரசாயனச் சத்துக்கள் காணப்படுவதே ஆகும். எனவே அளவான பழங்களை எடுக்க வேண்டும். சப்போட்டா பழங்களை இரவில் சாப்பிடுவதையும் தவிர்க்க வேண்டும்.

ஏனெனில் இப்பழத்தில் காணப்படும் Fructose, மற்றும் glucose போன்ற சீனிச்சத்துகள் இரத்தத்தில் சீனியின் அளவை மாற வைப்பதால் இரவில் உறக்கத்தில் குழப்பத்தை ஏற்படுத்தும். ஆரோக்கியமாக சீராக இப்பழத்தை சாப்பிட்டு வரும் போது குடலில் அமிலத் தன்மை குறைப்பதால் குடற்புண்ணை ஆற்றுவதில் சிறந்த பழமாகும்.

இப்பழம் இருதய பாதிப்பு உள்ளவர்களுக்கு சிறந்தது. இப்பழத்தை தொடர்ச்சியாக சாப்பிட்டு வர இரத்தக் குழாய்களில் கொலஸ்ரோல் படிவதை தடுக்கக்கூடியது. இப் பழத்தில் காணப்படும் எதிர் ஒட்சியேற்றத் தன்மையால் புற்று நோய் வராமல் தடுக்கக்கூடியது. குளிர் காலத்தில்தான் இப்பழங்கள் அதிகமாகக் கிடைக்கும். சப்போட்டா பழத்தில் காணப்படும் குளுக்கோசு சத்தும் அதிகரித்த கலோரியும் நீரிழிவு நோயாளிகள் இப்பழத்தை சாப்பிட்டால் இரத்தத்தில் சீனியின் அளவை அதிகரிக்கச் செய்யும். அதனால் நீரிழிவு நோயாளிகள் இரத்தத்தில் சீனியின் அளவு கட்டுப்பாட்டில் இல்லாவிட்டால் இப் பழங்களை தவிர்த்தல் வேண்டும்.

இப்பழங்களை சாப்பிட்டு வந்தால் உடம்பின் வெப்பத்தை போக்கி, பித்த மயக்கத்தையும் தீர்க்கக் கூடியது. சப்போட்டா பழத்தில் காணப்படும் பொற்றாசியம் சத்தானது இரத்த அழுத்தத்தை சீராக வைத்திருக்க உதவும்.

கடின உடல் உழைப்பிற்கு பின்பு ஏற்படும் களைப்பு அல்லது சோர்விற்கு சப்போட்டா பழ யூஸ் எடுத்தால் உடனே சக்தியைக் கொடுக்கும். சப்போட்டா பழத்தை விதை நீக்கி மென்று சாப்பிட்டு வர வாய்ப்புண் முதலியன ஆறும். சப்போட்டா பழத்தில் நுண்ணுயிர் கொல்லி தன்மையும் உண்டு.

சப்போட்டா பழத்திலுள்ள டனில் என்னும் சத்திலுள்ள பொலிபினோல் இராசயனப் பொருளானது புற்றுநோய் வராமல் தடுக்கக்கூடியது. குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள், அடிக்கடி உடற் சோர்வு ஏற்படுபவர்கள் முடி உதிர்தல் பிரச்சினை உள்ளவர்கள். குடற்புண் உள்ளவர்கள். என்புகளில் தேய்மானம் உள்ளவர்கள், தோல் தொற்று ஏற்படுபவர்கள், குருதிச் சோகை உள்ளவர்கள் தினம் ஒரு பழம் சிறிய தாயினும் இரண்டு பழங்கள் தாராளமாகச் சாப்பிடலாம். பழுத்த பழத்தை விதை நீக்கி மென்று சாப்பிடும் போது வாய்ப் புண்களை ஆற்றும்.

அதே போல் செரிமானத்தையும் சீராக்கும். சிறிதளவு மாச்சத்து, சர்க்கரை உயர்த்தும் திறனும் அதிகமாக இருப்பவர்கள் அடிக்கடி இப்பழத்தை சாப்பிடக்கூடாது. எப்போதாவது ஒரு நாள் இப் பழத்தை சாப்பிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 599





அதற்கெல்லாம் அத்தாட்சி என்ன? நான் நம்பவில்லை. எனக்கு யாரோ துர்ப்போதனை செய்துவிட்டதாகச் சொல்கிறாய். இல்லவே இல்லை, உனக்குத்தான் யாரோ துர்ப்போதனை செய்து, உன் மனத்தைத்தான் கெடுத்து விட்டிருக்கிறார்கள். தாயை மகனுக்கு விரோதியாக்கியிருக்கிறார்கள்.

நியாயமாக எனக்கு உரிய சோழ சிம்மாசனத்தை நான் ஒருநாளும் கைவிடமாட்டேன். நீ சொன்னாலும் விடமாட்டேன். சிவபதம் அடைந்த என் தந்தையே திரும்பி வந்து சொன்னாலும் கேட்கமாட்டேன். இந்தச் சோழ சாம்ராஜ்யம் என்னுடையது. இந்தப் பழமையான சிம்மாசனம் எனக்குரியது. கரிகால் பெருவளத்தான் அணிந்திருந்த மணி மகுடம் எனக்கு உரியது. அவற்றை நான் அடைந்தே தீருவேன். இதோ என் கழுத்தில் போட்டிருக்கும் ருத்திராட்சை மாலை நீ எனக்கு அளித்தது. தாய் என்ற மரியாதைக்காக இத்தனை நாளும் இதைத் தரித்திருந்தேன் என்னைப் பேடியாக்கி, நாடு நகரமெல்லாம் நகைக்கும்படி செய்த இந்த ருத்திராட்ச மாலையை இதோ இந்தக் கணமே கழற்றி எறிகிறேன் நீயே அதை வைத்துக்கொள்ளலாம்!"

இவ்விதம் பித்துப் பிடித்தவனைபோல் பிதற்றிவிட்டு மதுராந்தகன் தன் கழுத்திலிருந்த ருத்திராட்ச மாலையை அவசரமாகக் கழற்ற முயன்றான். கழற்ற முடியாமல் அதை அறுக்க முயன்றான் ஆனால் கழுத்து நெறிந்ததே தவிர, மாலை அப்படியே இருந்தது.

மதுராந்தகன் அழகிய தோற்றமுடையவன். சுந்தரசோழரின் புதல்வர்களைக் காட்டிலும் அழகன் என்று சொல்லலாம். அவர்களிடம் இல்லாத பெண் தன்மையின் வசீகரமான சாயல் அவன் முகத்தில் பொலிந்தது. அத்தகைய களை பொருந்திய அவன் முகம் கோபத்தினாலும் ஆத்திரத்தினாலும் இப்போது விகாரமடைந்து காட்டியது. அதைக் காணச் சகியாமல் செம்பியன்மாதேவி கண்களை மூடிக்கொண்டாள்.

அவன் சத்தமிட்டு ஓய்ந்த பிறகு தன் கண்களைத் திறந்து பார்த்தாள். குரலின் சாந்தத்தில் சிறிதும் மாறுதல் இல்லாமல், "மகனே! சற்று அமைதியாயிரு. நான் வஞ்சக அரக்கியாகவே இருந்தாலும் என் வார்த்தைகளைச் சற்றுச் செவிசாய்த்துக்,கேள்!" என்றாள்.

மதுராந்தகன் அந்தக் குரலைக் கேட்டுச் சிறிது அடங்கினான். நன்றாய்க் கேட்கிறேன் கேட்கமாட்டேன் என்று மறுக்கவில்லையே!" என்றான்.

"தாயின் இயல்பைக் குறித்து நீ குறிப்பிட்டாய், பொல்லாத அரக்கியாயிருந்தாலும் தன் குழந்தைக்குத் துரோகம் செய்யமாட்டாள். துஷ்ட மிருகங்களும் தங்கள் குட்டிகளை மற்ற துஷ்ட மிருகங்களிடமிருந்து காப்பாற்ற முயலுகின்றன. அது போலவேதான் நானும் உன்னைக் காப்பாற்ற முயல்கிறேன். நீ இராஜ்யத்துக்கு ஆசைப்பட வேண்டாம் என்று நான் சொல்லுவதற்கு முன்னே கூறியதைத் தவிர வேறு காரணமும் இருக்கிறது. இராஜ்ய ஆசையினால் உன் உயிருக்கே ஆபத்து வரும். பெற்று வளர்த்த தாய் தன் மகன் உயிரோடிருக்க வேண்டும் என்று ஆசைப்படுவதில் குற்றம் உண்டா? நீ இராஜ்யத்துக்கு ஆசைப்பட்டால், சுந்தர சோழரின் புதல்வர்களுக்கு எதிரியாவாய்.


ஆதித்த கரிகாலனும், அருள்மொழிவர்மனும் வீராதி வீரர்கள். நீயோ ஆயுதம் எடுத்து அறியாதவன். சோழ நாட்டுச் சைன்யம் முழுதும் சுந்தர சோழருடைய புதல்வர்களின் கட்சியிலேயே இருக்கும். படைத்தலைவர்களும் அவர்களுக்குச் சார்பாக இருப்பார்கள். அக்கம் பக்கத்து நாடுகளிலும் அவர்களுக்கு நண்பர்கள் இருக்கிறார்கள். உனக்குத் துணைவர்கள் யார்? யாரை நம்பி நீ அவர்களுடன் போர் தொடங்குவாய்? மகனே! சில நாளாக வானத்தில் தூமகேது தோன்றியிருப்பதை நீ அறிவாய். வால் நட்சத்திரம் வானில் தோன்றினால் அரச குலத்தினர் உயிருக்கு அபாயம் என்பது உலகம் கண்ட உண்மை.

(தொடரும்)

## தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு யாழ்.பொதுநூலகம் வழங்கும் ஆக்கங்கள்


### வாசிப்பின் முக்கியத்துவம்

உன்னைத் தொட்டுத் தொட்டுப் பார்த்தேன்...
நீயோ! வெறும் காகிதமாய் தெரிந்தாய்...
தனிமையில் உன்னை வாசித்தேன்
என் வாழ்க்கையை உணர வைத்தாய்..!
உன்னைத் தொடர்ந்து வாசித்தேன்
நீயோ! வெற்றியின் ஆயுதமாய் திகழ்ந்தாய்...
நீ இல்லை என்றால் சரித்திரம் மௌனமாகிவிடும்...
இலக்கியம் ஊமையாகிப் போகும்...!
இனி நீயே என் உயிர் நண்பன்..
என் உயிர் காவலன்...!!!



த.கவிந்தினி,
ஆனைக்கோட்டை.

## ஓர் எழுத்துப் புதிர்



சிரித்துக் கொண்டிருக்கும் எழுத்து
ஈ
கேட்டுக் கொண்டிருக்கும் எழுத்து
தா
துரத்திக்கொண்டிருக்கும் எழுத்து
போ
தொடாமல் தொடும் எழுத்து
தீ
எப்போதும் வலியால் துடிக்கும் எழுத்து
ஆ
தேனீகளுக்கு விருந்துகொடுக்கும் எழுத்து
பூ

த.அதிஷ்ரிதா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிவான, அமைதியான மனமே எதிர்பாராத சூழ்நிலைகளிலிருந்து தன்னை பாதுகாத்துக் கொள்ளும்.
– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தாய் அகமகிழ்ந்த நாள் - 2024 ஒக். 6

1974ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 2024ஆம் ஆண்டில் 50ஆவது அகவையில் பொன்விழாவைக் கண்டுள்ளது.

இதன் சிறப்பாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நுழைவாயிலில் புதிதாக அமைக்கப்பட்ட நுழைவாயில் வளைவு நேற்று 2024 ஒக்ரோபர் 6ஆம் திகதி சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நுழைவாயில் வளைவு எமது தமிழ்ப் பண்பாட்டையும் சேர் பொன்.இராமநாதன் பிரபுவால் ஆரம்பிக்கப்பட்ட திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரியின் அடையாளத்தையும் பிரதிமை செய்வதாக அமைந்துள்ளது.

அதிலும் தர்மத்தின் அடையாளமாகிய நந்திகள் வளைவின் இரு மருங்கிலும் இருக்க, எமது பல்கலைக்கழக இலட்சனை வானுயர்ந்து நிற்பது மனநிறைவைத் தருகிறது.

ஆம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நுழைவாயிலில் இருந்த இரு பெரும் நந்திகள் அகற்றப்பட்டு நுழைவாயில் தூண்கள் வெறுமையாக இருந்தபோது, அது கண்டு மனதால் அழுதவர்கள் பலர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நுழைவாயிலில் இரு மருங்கிலும் மீளவும் நந்திகள் வைக்கப்பட வேண்டுமென இவ்விடத்தில் ஏழு தடவைகள் எழுதியிருந்தோம்.

தவிர, அதுபற்றி ஆலடி மாநாட்டில் எழதப்பட்டவை இங்கு கணக்கில் எடுக்கப்படவில்லை.

இவ்வாறு பல தடவைகள் எழுதியபோது அஃது பல்கலைக்கழக நிர்வாகம் சார்ந்தவர்களுக்கு மன உளைச்சலை ஏற்படுத்தியிருக்கும் என்ற உண்மையை நாம் அறியாதவர்களும் அல்ல.

அதேநேரம் நந்திகள் தொடர்பில் நாம் இங்கு பிரஸ்தாபித்தவை எமது சுயநலம் சார்ந்தவையும் அன்று.

மாறாக, எங்கள் தமிழினத்தின் அடையாளத்தை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு தனது சொத்தை ஈகை செய்த சைவப் பெருவள்ளல் சேர் பொன்.இராமநாதன் பிரபுக்கு நன்றி செலுத்துகின்ற உயரிய பண்பாட்டை நாம் மறந்தவர்களாக ஆகிவிடக்கூடாது என்ற ஒரே நோக்கிலேயே இவ்விடத்தில் நுழைவாயில் நந்தி தொடர்பில் ஏழு தடவைகள் எழுதினோம்.

அன்றி, தனிப்பட்ட வகையில் எவரையும் மனம் நோகவைக்கும் எண்ணம் நம் சிந்தையில் இம்மியும் இல்லை.

பரவாயில்லை. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தனது பொன்விழா நிறைவு காலத்தில் நுழைவாயில் சிறப்புப் பெற்றிருப்பதும் ஒரு வகையில் பெருமைக்குரியதே.

ஆக, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நுழைவாயில் வளைவு எளிமைமிகு வனப்புடன் அமைவதற்குக் காரணமாக இருந்த யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா உள்ளிட்ட அனைவருக்கும்

நுழைவாயிலில் மீளவும் நந்திகள் வைக்கப்பட வேண்டுமென பேரவைக் கூட்டங்களில் கருத்துரைத்த யாழ்.பல்கலைக்கழக பேரவை உறுப்பினர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்களுக்கும் இன்னும் யார்யாரெல்லாம் நுழைவாயில் வளைவு அமையப் பாடுபட்டார்களோ அவர்கள் அனைவரும் என்றும் நன்றிக்குரியவர்கள்.

இவர்களின் பணியால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தாய் அகமகிழ்ந்து நிற்கிறாள்.

அதுகண்டு அவளின் பிள்ளைகள் நாம் அனைவரும் மனநிறைவு கொண்டுள்ளோம்.

# போர்க்கால மனித உரிமை மீறல் பொறுப்புக்கூறலை உறுதி செய்க!

## 25 சிவில்சமூக அமைப்புகள் கோரிக்கை

ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட இலங்கை தொடர்பான தீர்மானத்தைக் காலநீடிப்பு செய்வதற்கு ஆதரவளித்தல் உள்ளடங்கலாக ஏற்கனவே அளித்த வாக்குறுதிகளுக்கு அமைவாக நாட்டில் கட்டமைப்பு ரீதியான மாற்றத்தை ஏற்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளைப் புதிய அரசாங்கம் முன்னெடுக்கவேண்டும் என 25 சிவில் சமூக அமைப்புக்கள் கூட்டாக வலியுறுத்தியுள்ளன.

இதுகுறித்து சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையம், சட்டம் மற்றும் சமூக நிதியம், பெண்கள் செயற்பாட்டு வலையமைப்பு, இனக்கற்கைளுக்கான சர்வதேச நிலையம் உள்ளிட்ட 25 அமைப்புக்கள் ஒன்றிணைந்து வெளியிட்டிருக்கும் கூட்டறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது,

நாட்டில் நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் மற்றும் புதிய அரசாங்கத்தின் நியமனத்தை இலங்கையின் அரசியல் மாற்றத்தின் மிகமுக்கிய மைல்கல்லாகக் கருதுகிறோம். தேர்தலும், ஆட்சி மாற்றமும் அமைதியாகவும் சுமுகமாகவும் நடைபெற்றமை குறித்து மகிழ்ச்சியடைகிறோம்.

நாடு இப்போது பாராளுமன்றத்தேர்தலுக்குத் தயாராகி வருகிறது. நாட்டை ஜனநாயகப் பாதையில் கொண்டு செல்வதாகவும், ஊழலை இல்லாதொழிப்பதாகவும், தனக்கு வாக்களிக்காதோர் உள்ளடங்கலாக நாட்டின் பிரஜைகள் சகலருக்கும் ஜனாதிபதியாக செயற்படுவதாகவும் அண்மையில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க உறுயளித்திருந்தார். அது மாத்திரமன்றி நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்திருந்தார்.

இவ்வாறானதொரு பின்னணியில் 'அரகலய' போராட்டத்தின் ஊடாக மக்களால் வலியுறுத்தப்பட்ட கட்டமைப்பு ரீதியான மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான வாய்ப்பு தற்போது கிடைத்திருக்கிறது.

ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளை மேலும் வலுப்படுத்துவதற்கும், பல்வேறு காரணிகளின் அடிப்படையில் பின்தங்கிய மற்றும் நலிவுற்ற சமூகப்பிரிவினரின் வாழ்வை மேம்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கும் அரசாங்கம் இந்த வாய்ப்பைப் பயன்படுத்தும் என நம்புகிறோம்.

அதேவேளை அனைவருக்குமான நீதியை நிலைநாட்டுவதை முன்னிறுத்தி நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழித்து, அதிகாரப்பகிர்வை வழங்கக்கூடிய புதிய அரசியலமைப்பை உருவாக்கல், சமூக மற்றும் பொருளாதார உரிமைகளை மேம்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுத்தல், சகல இனங்களுக்குமிடையிலும் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்பல், பொது ஒழுங்கைப் பேணுவதற்கும் பொலிஸ் அதிகாரங்களைப் பயன்படுத்துவதற்கும் இராணுவத்துக்கு அதிகாரம் அளிக்கும் வகையில் வெளியிடப்பட்டுவரும் வர்த்தமானி அறிவித்தலை இரத்துச்செய்தல், போர்க்கால மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பொறுப்புக்கூறலை உறுதி செய்தல், ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட இலங்கை தொடர்பான தீர்மானத்தைக் காலநீடிப்பு செய்வதற்கு ஆதரவளித்தல் ஆகிய நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுக்கவேண்டும் என அக்கூட்டறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (ந-7)

# ஐயாயிரம் பேர் தேர்தல் கடமையில்

## பவ்ரல் அறிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் நவம்பர் மாதம் 14 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் கண்காணிப்பு பணிகளுக்காக சுமார் ஐயாயிரம் பேரை கடமையில் அமர்த்த உள்ளதாக பவ்ரல் அமைப்பு அறிவித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலை விடவும் கூடுதல் எண்ணிக்கையில் பணியாளர்கள் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

இந்த விடயத்தை பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாரச்சி தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சுமார் நான்காயிரம் பேர் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபட்டிருந்தனர்.

அத்துடன் நீண்டகால அடிப்படையிலான கண்காணிப்பாளர்களாக 200 பேர் வாகனங்களுடன் நியமிக்கப்படவுள்ளனர்.

பொதுத் தேர்தலின் போது விருப்பு வாக்குகளும் எண்ணப்படும் காரணத்தினால் வாக்கு எண்ணும் நிலையங்களில் கூடுதல் கண்காணிப்பாளர்களை ஈடுபடுத்த பவ்ரல் திட்டமிட்டுள்ளது. (நி)

# நிர்மலநாதன் போட்டியிடவில்லை

## சுமந்திரன் தெரிவிப்பு

(வவுனியா)

இலங்கைத்தமிழரசுக் கட்சியின் முன்னாள் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் பொதுத் தேர்தலில் போட்டியிட எமது கட்சியிடம் விண்ணப்பிக்கவில்லை என கட்சியின் வேட்பாளர் தெரிவுக் குழு உறுப்பினரும், பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று (06) இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது வன்னி மாவட்டத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் போட்டியிடவுள்ளதாகச் செய்திகள் வெளியாகியுள்ளது. உண்மையில் அவர் போட்டியிடுகின்றரா? என ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த எம்.ஏ.சுமந்திரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தான் இம்முறை போட்டியிடவில்லை எனத் தெரிவித்தார். தற்போது போட்டியிடுவதாகச் செய்தி வந்ததாக கூறுகிறீர்கள். அது எமக்குத் தெரியாது. அவர் போட்டியிட கட்சியிடம் விண்ணப்பிக்கவில்லை எனத் தெரிவித்தார். (ந-7,250)

## இறக்குமதி செய்யப்படும் தேங்காய் எண்ணெய் சுத்தமானதே

### பொதுச் சுகாதார பரிசோகர் சங்கம்

இறக்குமதி செய்யப்படும் தேங்காய் எண்ணெய்தொடர்பில் தேவையற்ற அச்சம் கொள்ளத் தேவையில்லை என பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத் தலைவர் அறிவித்துள்ளார்.

அகில இலங்கை பாரம்பரிய தேங்காய் எண்ணெய் உற்பத்தியாளர்கள் சங்கத்தின் இணைப்பாளர் புத்திக டி சில்வா இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் தேங்காய் எண்ணெய் சுகாதாரமற்றது செயற்கை முறையில் சுத்திகரிக்கப்பட்டது என முன்வைத்த குற்றச்சாட்டுக்குப் பதிலளித்து அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கு தேங்காய் எண்ணெயை கொண்டு வரும் போது உணவு பாதுகாப்புப் பிரிவின் உணவு பரிசோதகர்கள் மற்றும் இலங்கை தர நிர்ணய பணியகத்தின் அதிகாரிகள் இணைந்து தேங்காய் எண்ணெயின் தரம் குறித்து முழுமையான ஆய்வுகளை மேற்கொள்கின்றனர் என பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்துள்ளார். (ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒக்டோபர் மாத இராசி பலன்கள்-2024

## குடும்பத்தில் குதூகலம் ஏற்படும்



**கிரகநிலை**

இராசியில் சந்திரன், சனி (வ) - தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் ராஹூ - சுக ஸ்தானத்தில் குரு - பஞ்சம ஸ்தானத்தில் செவ்வாய் - களத்திர ஸ்தானத்தில் புதன் - அஷ்டம ஸ்தானத்தில் சூரியன், சுக்கிரன், கேது என கிரகநிலை உள்ளது.

**கிரகமாற்றங்கள்:**

06-10-2024 அன்று புதன் அஷ்டம ஸ்தானத்தில் இருந்து பாக்கிய ஸ்தானத்திற்கு மாறுகிறார். 14-10-2024 அன்று சுக்கிரன் களத்திர ஸ்தானத்தில் இருந்து அஷ்டம ஸ்தானத்திற்கு மாறுகிறார். 17-10-2024 அன்று சூரியன் அஷ்டம ஸ்தானத்தில் இருந்து பாக்கிய ஸ்தானத்திற்கு மாறுகிறார். 23-10-2024 அன்று செவ்வாய் பஞ்சம ஸ்தானத்தில் இருந்து ரண ருண ரோக ஸ்தானத்திற்கு மாறுகிறார். 25-10-2024 அன்று புதன் அஷ்டம ஸ்தானத்தில் இருந்து பாக்கிய ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

**பலன்**

இந்த மாதம் சுகஸ்தான ராசியில் குரு பகவான் வக்ரமாக இருக்கிறார். குறிக்கோளற்ற பயணங்கள் அதன் மூலம் அலைச்சல், உடல்நலக் கேடு போன்றவை ஏற்படலாம். திட்டமிட்டு எதையும் செய்வது நல்லது. மனதில் வீண்கவலைகள் உண்டாகக் கூடும். அடுத்தவரை நம்பி எதையும் ஒப்படைப்பதை தவிர்ப்பது நல்லது. சுபச் செலவுகள் ஏற்படும். தொழில் வியாபாரம் திட்டமிட்டபடி நடந்தாலும் சற்று நிதானமாக இருக்கும். சரக்குகளை வாடிக்கையாளர்களுக்கு அனுப்புவதில் தாமதம் ஏற்படலாம்.

போட்டிகள் தலைதூக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் கூடுதலான வேலைப்பளுவால் உடல் சோர்வடைவார்கள். குடும்பத்தில் இறுக்கமான சூழ்நிலை அகலும். மனதில் இருப்பதை வெளியில் காட்டிக் கொள்ள மாட்டீர்கள். ராசிக்கு 5இல் செவ்வாய் - 09இல் சுக்கிரன் சஞ்சாரம் செய்கிறார்கள். உடல் ஆரோக்கியம் சிறக்கும். கணவன், மனைவிக்கிடையில் இணக்கமான போக்கு காணப்படும்.

பெண்களுக்கு வீண் கவலைகள். எதிர்பாராத அலைச்சல் ஏற்படலாம். கலைத்துறையினர் எதையும் திட்டமிட்டு செய்வது நன்மை தரும். அரசியல்துறையினருக்கு அதிஷ்டங்கள் கிடைக்கும். மாணவர்களுக்கு கல்வி பற்றிய பயம் ஏற்பட்டு நீங்கும்.

**அவிட்டம்**

இந்த மாதம் உறவினர்கள் மூலம் நன்மை உண்டாகும். வீட்டிற்கு தேவையான பொருட்கள் சேரும்.




நம்பிக்கையுடன் காரியங்களில் ஈடுபட்டு வெற்றி காண்பீர்கள். மற்றவர்களை நம்பி பொறுப்புகளை ஒப்படைப்பதில் கவனம் தேவை.

**சதயம்**

இந்த மாதம் மாணவர்கள் கல்வி தொடர்பான பயணங்கள் செல்ல வேண்டி இருக்கும். சக மாணவர்கள் ஒத்துழைப்பு கிடைக்கும். புத்தி சாதுரியத்துடன் காரியங்களை செய்வீர்கள். எதிர்பார்த்த பணம் வரலாம். எதிர்ப்புகள் விலகும்.

**பூரட்டாதி**

இந்த மாதம் வயிறு சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் வரலாம். எந்த காரியம் செய்தாலும் தாமதம் உண்டாகும். எல்லாவற்றிலும் ஒரு பயம் ஏற்படும். புதியநபர்களின் நட்பு உண்டாகும். வீடு வாகனம் தொடர்பான விஷயங்களில் கூடுதல் கவனம் தேவை.

**பரிகாரம்**

விநாயக பெருமானை தேங்காய் உடைத்து தீபம் ஏற்றி வணங்கி வர வீண் அலைச்சல் குறையும். காரிய தடை நீங்கும். கல்வி அறிவு அதிகரிக்கும்.

**அதிஷ்ட கிழமைகள்**
திங்கள் - புதன்

**சந்திராஷ்டம தினங்கள்:**
2, 3, 29, 30, 31

**அதிஷ்ட தினங்கள்:**
22, 23

## மனது அறிந்து செயற்பட்டால் காரிய வெற்றி கிடைக்கும்



**கிரகநிலை**

ராசியில் ராஹூ - தைரிய வீரிய ஸ்தானத்தில் குரு - சுக ஸ்தானத்தில் செவ்வாய் - ரண ருண ரோக ஸ்தானத்தில் புதன் - களத்திர ஸ்தானத்தில் சூரியன், சுக்கிரன், கேது - அயன சயன போக ஸ்தானத்தில் சந்திரன், சனி (வ) என கிரகநிலை உள்ளது.

**கிரகமாற்றங்கள்**

06-10-2024 அன்று புதன் களத்திர ஸ்தானத்தில் இருந்து அஷ்டம ஸ்தானத்திற்கு மாறுகிறார். 14-10-2024 அன்று சுக்கிரன் ரண ருண ரோக ஸ்தானத்தில் இருந்து களத்திர ஸ்தானத்திற்கு மாறுகிறார். 17-10-2024 அன்று சூரியன் களத்திர ஸ்தானத்தில் இருந்து அஷ்டம ஸ்தானத்திற்கு மாறுகிறார். 23-10-2024 அன்று செவ்வாய் சுக ஸ்தானத்தில் இருந்து பஞ்சம ஸ்தானத்திற்கு மாறுகிறார். 25-10-2024 அன்று புதன் களத்திர ஸ்தானத்தில் இருந்து அஷ்டம ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

**பலன்**

இந்த மாதம் நீங்கள் மற்றவர்கள் மனது அறிந்து செயற்பட்டால் காரிய வெற்றி கிடைக்கும். நிலுவையில் இருந்த பணம் வந்து சேரும். நீண்ட நாட்களாக வாங்க திட்டமிட்ட வாகனம் சொத்து மற்றும் வீட்டிற்கு தேவையான பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். பயணங்கள் சாதகமான பலன் தருவதாக இருக்கும். எதிர்பாராத அதிஷ்டமும் கிடைக்கலாம். உடல் ஆரோக்கியம் உண்டாகும். தெய்வ பக்தி அதிகரிக்கும். தொழில் வியாபாரம் சிறப்பாக நடக்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். எதிர்பார்த்த கடனுதவி கிடைக்கும். வியாபாரத்தை விரிவுபடுத்த முயற்சிகள் மேற்கொள்வீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் வேலைப்பளு குறைந்து மன மகிழ்ச்சியடைவார்கள்.

மேல் அதிகாரிகளின் உதவியும், ஆலோசனையும் கிடைக்கும். புதிய வேலைக்கான முயற்சிகளில் சாதகமான போக்கு காணப்படும். குடும்பத்தில் இதமான சூழ்நிலை காணப்படும். உறவினர்கள் வருகை அதனால் நன்மையும் இருக்கும். கணவன், மனைவிக்கிடையில் நெருக்கம் அதிகரிக்கும். பெண்களுக்கு முயற்சிகள் நல்ல பலன் தரும். கலைத்துறையினருக்கு பணவரத்து திருப்தி தரும். அரசியல் துறையினருக்கு புதிய பதவிகள் கிடைக்கும். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் காணப்படும். கஷ்டமாக தோன்றிய பாடங்களை எளிதாக படித்து முடிப்பீர்கள்.




**பூரட்டாதி**

இந்த மாதம் தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் எவ்வளவு திறமையாக செயல்பட்டாலும் மெத்தனமான போக்கு காணப்படும். வியாபாரம் தொடர்பான பயணங்களை திட்டமிட்டபடி மேற்கொள்ள முடியாத நிலை உண்டாகும்.

**உத்திரட்டாதி**

இந்த மாதம் உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு அலுவலக வேலைகளால் டென்ஷன் உண்டாகலாம். சக ஊழியர்களின் ஒத்துழைப்பு இருக்கும். குடும்பத்தில் இருப்பவர்களால் நிம்மதி குறைவு உண்டாகலாம். கணவன், மனைவிக்கிடையே மனம் விட்டு பேசுவதன் மூலம் முக்கியமான காரியங்களில் நல்ல முடிவு எடுக்க முடியும்.

**ரேவதி**

இந்த மாதம் வாக்குவாதங்கள் அடுத்தவர் பற்றிய விமர்சனங்களை தவிர்ப்பது நல்லது. பிள்ளைகளின் நலனுக்காக பாடுபட வேண்டி இருக்கும். மாணவர்களுக்கு கல்வி பற்றிய கவலை அதிகரிக்கும். திடமான மனதுடன் படிப்பது வெற்றியை தரும்.

**பரிகாரம்**

முருகனை வணங்கிவர எல்லா நன்மைகளும் உண்டாகும். தேவையான நேரத்தில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**அதிஷ்ட கிழமைகள்:**
ஞாயிறு - வியாழன்

**சந்திராஷ்டம தினங்கள்:**
4, 5, 6

**அதிஷ்ட தினங்கள்:**
24, 25, 26

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாதிக்கப்பட்ட...

நீதியும் நியாயமும் நிலை நிலைநாட்டப்படுமென ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க உறுதியளித்தார்.

ஈஸ்டர் தாக்குதலில் காயமடைந்தவர்கள் மற்றும் உயிரிழந்தவர்களின் குடும்ப உறுப்பினர்களுடன் நேற்று நீர்கொழும்பு, கட்டுவாபிட்டிய சென். செபஸ்தியன் தேவாலயத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அவர் உறுதியளித்தார்.

நேற்றுக் காலை கட்டுவாபிட்டிய தேவாலயத்திற்குச் சென்றிருந்த ஜனாதிபதி, ஈஸ்டர் தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்காக அமைக்கப்பட்டிருக்கும் நினைவுத் தூபிக்கு மலர் அஞ்சலி செலுத்தினார்.

தொடர்ந்து ஈஸ்டர் தாக்குலில் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருடன் ஜனாதிபதி கலந்துரையாடலில் ஈடுபட்டார். இதன்போது நேரடியாக ஜனாதிபதியிடம் அவர்கள் தமது பிரச்சினைகளை எடுத்துக் கூறினர்.

இதன்போது கருத்துரைத்த ஜனாதிபதி இந்நாட்டில் அண்மைய காலத்தின் மிக மோசமான அழிவு 2019ஆம் ஆண்டு ஏப்ரல் 21ஆம் திகதி நிகழ்ந்தது. அந்த விடயங்கள் மண்ணுக்குள் புதையுண்டு அழிவதற்கு தான் ஒரு போதும் இடமளிக்கப் போவதில்லை என்றார். (ந-7)

## கணக்கெடுப்பு...

அதற்காக மக்கள் தொகைக் கணக்கெடுப்பு அதிகாரிகள் வீடு வீடாகச் செல்லவுள்ளதாக மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அனோஜா சேனவிரத்ன தெரிவித்துள்ளார்.

2012 மக்கள்தொகைக் கணக்கெடுப்புடன் ஒப்பிடுகையில், சமீபத்திய பட்டியல்கள் வீட்டு அலகுகளில் 24% அதிகரிப்பைக் காட்டுகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார். (ந-7)

## புகையிரத...

தாமதமாகும் என தொடருந்து திணைக்களம் தெரிவித்துள்ளது.

அநுராதபுரம் முதல் மஹவ வரையிலான தொடருந்து மார்க்கத்தின் திருத்தப் பணிகள் நிறைவடைந்த போதிலும் சமிஞ்ஞை கட்டமைப்பு நடவடிக்கைகள் இதுவரையில் நிறைவு செய்யப்படவில்லை.

ஆகையால், அநுராதபுரம் முதல் மஹவ வரையிலான புகையிரத மார்க்கத்தின் திருத்தப் பணிகள் நிறைவடைந்தபோதிலும் சேவையை முன்னெடுப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகத் தொடருந்து திணைக்களத்தின் பிரதி பொதுமுகாமையாளர் என்.ஜே. இந்திபொலகே தெரிவித்தார். (ந-7)

## ஒன்பது...

டத்தில் போட்டியிடும் வேட்பாளர்களின் பெயர் விபரங்கள் வெளியாகியுள்ளன.

இதன் பிரகாரம் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன், கனகரட்ணம் சுகாஸ், நடராஜர் காண்டீபன், வாசுகி சுதாகரன், ஜெகதீஸ்வரன், க.ஞானகுணேஸ்வரி, மேலிஸ் ஜின்சியா, எம்.நடனதேவன் ஆகியோரே போட்டியிடவுள்ளதாக கட்சியால் அறிவிக்கப்பட்டுள்ளது.(ந-7)

## விபத்தில்...

கிழமை அதிகாலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

மாமுனையிலிருந்து தாளையடி நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிளும் செம்பியன்பற்றுக் கடற்கரை வீதியில் இருந்து உள்ளக வீதிக்குப் பயணித்த மோட்டார் சைக்கிளும் செம்பியன்பற்று வடக்கு நாற்சந்தியில் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானது.

இதன்போது பலத்த காயமடைந்த மாமுனைப் பகுதியைச் சேர்ந்த கடற்புலி முன்னாள் போராளியும், கண்ணிவெடி அகற்றும் மனிதாபிமான பணியை மேற்கொண்டுவந்தவருமான புரட்சி (நடேசு பரமேஸ்வரன்) யாழ்.போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

பிரேத பரிசோதனையின் பின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுவது டன் விபத்து குறித்து மருதங்கேணி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-7)

## கொழும்புத்துறை...

டுள்ளார்.

மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபால

### தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை

# மேலதிக வினாக்கள் வெளியாகியதா?

## பொலிஸில் உடன் முறையிடுங்கள்

(கொழும்பு)

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் மூன்று வினாக்களுக்கு மேலதிகமாக மேலும் சில வினாக்களும் வெளியாகியுள்ளதாகத் தெரிவித்து பெற்றோர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் நிலையில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை இடம்பெறுவதற்கு முன்னர் கசிந்ததாக உறுதிப்படுத்தப்பட்ட மூன்று வினாக்கள் தவிர்ந்த மேலும் வினாக்கள் கசிந்திருக்குமாயின் அவை தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்குமாறு கோரப்பட்டுள்ளது. பதில் பொலிஸ்மா அதிபரின் ஆலோசனைக்கு அமைய அது தொடர்பான முறைப்பாடுகள் கோரப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, அருகில் உள்ள பொலிஸ் நிலையங்களில் தங்களது முறைப்பாட்டை முன்வைக்க முடியும் என குறிப்பிட்டுள்ள அவர், மேற்படி முறைப்பாடுகளை தாமதிக்காது பொலிஸ் நிலையங்களில் பதிவு செய்யுமாறும் கோரியுள்ளார். (ந-7)

சிங்கம் மேற்கொண்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்கு அறிவுறுத்தினார்.

மேலதிக விசாரணைகளையாழ்ப்பாணப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ந-7)

## முறை...

யான நடவடிக்கைகளை எடுக்குமாறு அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும்பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய பணிப்புரை விடுத்துள்ளார்.

அதேவேளை புதிதாக பதியப்படும்முறைப்பாடுகளை 48 மணித்தியாலத்துக்குள் விசாரித்து முடிக்குமாறும் அவர் அறிவுறுத்தியுள்ளார். (ந-7)

## தமிழ...

சசீந்திரன், இமானுவேல் ஆர்னோல்ட், கிருஷ்ணவேணி சிறீதரன், தியாகராசா பிரகாஸ், அதிபோர் போட்டியிடவுள்ளனர். (ந-7)


மஹஜன சம்பத
திகதி 2024.10.06
சீட்டிழுப்பு இலக்கம் 5617
Y 9 5 2 7 6 0
அத சம்பத Y 2 7 6 0
சீட்டிழுப்பு இலக்கம் 192
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.10.06
சீட்டிழுப்பு இலக்கம் - 1647
M 14 20 28 60 M
Double Chance 65755

மெகா பவர்
திகதி 06/10/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1965
J 15 05 48 76 80
Double Chance 47486

லக்கி 7 VIP
திகதி 2024.10.06
சீட்டிழுப்பு இலக்கம் 0443
K 5 8 4 8 1 0 K

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3859
சீட்டிழுப்பு திகதி 06.10.2024
W 31 58 62 63
W 57593

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.10.06
சீட்டிழுப்பு இலக்கம் 926
மேஷம் 16 19 28 60 மேஷம்
40192 18

ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம் : 2417
சீட்டிழுப்பு திகதி : 2024.10.06
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.72,342,107.20
ADA KOTIPATHI
05 07 37 62 B
690981
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
X 07 05 06 15 59
1767
மஞ்சள்
06.10.2024 ஞாயிறு
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 548,896,323.00
DLB

சீட்டிழுப்பு வாரம் 4303
சீட்டிழுப்பு திகதி 2024.10.06
வர்ணம் ஊதா
தினம் ஞாயிற்றுக்கிழமை
15 26 42 62
மகரம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 4,895,431.20
227751
DLB

SASIRI
வெற்றி வாரம் 537
சீட்டிழுப்பு திகதி 2024.10.06
கபிலம்
05 10 49
07
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,532,000/-
DLB

சனிதா
திகதி 2024.10.06 வெற்றி வாரம் 4752 வர்ணம் இளஞ்சிவப்பு
29 37 46 63 D
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.53,189,386.00
78828
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2591
சீட்டிழுப்பு திகதி 06.10.2024
வர்ணம் ஆரஞ்சு நிறம்
தினம் ஞாயிறு
14 20 39 63 R
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 61,551,969.60
DLB

உத்தியோகபூர்வ முடிவுகள்
06.10.2024 வெற்றி வாரம் 325 வர்ணம் பழுப்பு
E 5 1 5 2 3 6
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.23,289,208.00
42682
DLB


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-1343)

**076 825 7716** (ஆகாஸ்)


## சுகிசிவத்தின் சொற்பொழிவு

யாழ்ப்பாணம் அறிவுத் திருக்கோவிலில் எதிர்வரும் 15.10.2024 செவ்வாய்க்கிழமை 8 ஆம் ஆண்டு விழாவை முன்னிட்டு சொல்வேந்தர் சுகிசிவத்தின் சொற்பொழிவு காலை 10 மணிக்கும் மாலை 5 மணிக்கும் இடம்பெறும். மாணவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். மேலதிக தொடர்புகளுக்கு 021 222 2772, 077 736 8745. (நி)


## யாழ்ப்பாணம் - சென்னை விமான சேவைகள்

யாழ் - சென்னை விமானப் பயணச் சீட்டுக்கள்
36,500/= இலிருந்து விசேட விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
ஒரு வருட E-Visa இனை 9000/= ரூபாவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். (408)

**APEX TRAVELS**

**0777 597 598, 076 3333 644**

இல.105/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். CTB பஸ் தரிப்பிடத்திற்கு அருகில்)

## வாடகைக்கு

கொடிகாமம்
Commercial Bank க்கு மேலுள்ள கடைகள் வாடகைக்கு உண்டு. (405)

தொடர்புகளுக்கு
**077 459 6410**

## அமெரிக்க லொத்தர் விசா

பதிவுகள் ஆரம்பமாகிவிட்டன
2026ல் நீங்களும் அமெரிக்காவில்...
ஒரு உறுதியான முடிவு உங்கள் வாழ்க்கையை மாற்றிவிடும்!
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்
**0768226244**
எமக்கூடாக விண்ணப்பித்து வெற்றிபெற்ற ஏராளமானோர் அமெரிக்காவில்
குடும்பத்தினர்களுக்கு இரண்டு வாய்ப்புக்கள்
விண்ணப்ப முடிவு திகதி **05-11-2024**
வெளிநாட்டில் வாழ ஒரு இலவச சந்தர்ப்பம்! தவறவிடாதீர்கள்!

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கொழும்பு 0777469777 | வவுனியா 0743900350 | மட்டக்களப்பு 0743900352 | திருகோணமலை 0768226237 | மன்னார் 0743900353 | முல்லைத்தீவு 0743900351 |
| புதுக்குடியிருப்பு 0764550673 | கிளிநொச்சி 0768226240 | யாழ்ப்பாணம் 0777068777 | கொடிகாமம் 0764550675 | சாவகச்சேரி 0768226242 | மானிப்பாய் 0768226238 |
| சுன்னாகம் 0764550670 | பண்டத்தரிப்பு 0777718322 | சங்கானை 0777726322 | கோப்பாய் 0764550674 | புத்தூர் 0764550671 | நாச்சிமார் கோவிலடி 0777720322 |
| நெல்லியடி 0776699892 | V2 Travels | | வேலணை 0743900353 | பருத்தித்துறை 0768226230 | வல்வெட்டித்துறை 0776697960 |

**V2 Travels**



"குழந்தையின்மைக்கு சிறந்த தீர்வு"

## மாபெரும் இலவச மருத்துவ முகாம்

கருவளச்சிகிச்சையில் புகழ்பெற்ற வைத்தியநிபுணர் Dr.H.ரத்னாயக்கா அவர்களைச் சந்தித்து ஆலோசனை பெறும் அரியவாய்ப்பு உங்கள் அனைவருக்கும் கிடைக்கின்றது.

காலம் - 15.10.2024 செவ்வாய்க்கிழமை
நேரம் – காலை 8.00 மணி – பிற்பகல் 2.00 மணி
இடம் - இணுவில் – மக்லோட் வைத்தியசாலை

ஏற்கனவே முற்பதிவு செய்தவர்களுடன் அனைவரும் பங்குபற்றலாம்.

தொடர்புகளுக்கு
**0771215005 , 0760114702, 0212241569**

மக்லோட் வைத்தியசாலை, கே.கே.எஸ் வீதி, இணுவில், யாழ்ப்பாணம்

கருவளச்சிகிச்சைக்கு வருவதற்கு யாழ்ப்பாணம் நகரத்திலிருந்து கே.கே.எஸ் வீதி ஊடாக இணுவிலிற்கு 16 நிமிடங்கள் மட்டுமே (C-1346)



விசேட விலைக் கழிவு | X MARD | திங்கட்கிழமை 07.10.2024

| | | | |
|---|---|---|---|
| Rs. 229.00 Bulk Max 2kg வெள்ளைச் சீனி | Rs. 159.00 Bulk Max 2kg கோதுமை மா | Rs.379 மஞ்சள் பருப்பு | Rs. 749.00 Bulk செத்தல் மிளகாய் |
| Rs. 999.00 Anchor 400g | Rs.249.00 ~~300~~ Fems 8 Pcs | Rs. 59.00 ~~80~~ Anchor Yoghurt | Rs. 1799.00 ~~2000~~ Protinex |
| Rs. 339.00 ~~425~~ Vim Liquid | Rs. 2589.00 ~~3000~~ Vitagen Vannila | Rs. 299.00 ~~380~~ Sunlight Powder Rose | Rs. 1129.00 ~~1180~~ Anchor Plus |
| Rs. 149.00 ~~175~~ Santoor Soap | Rs. 439.00 ~~480~~ Chick Shampoo | Rs. 2999.00 ~~3355~~ Diabeta Plus | Rs. 379.00 ~~500~~ Ocean Star Mackerel |
| Rs. 919.00 ~~1150~~ 5kg Prima Wheat Flour | Rs. 3499.00 ~~3900~~ Sustagen 400g | Rs. 149.00 ~~200~~ Noodles | Rs. 349.00 ~~400~~ Pepsi 1.5L |

Call For Information 074 1011 345
மருதனார்மடம் (யாழ். இராமநாதன் கல்லூரிக்கு முன்பாகவும் வட. இலங்கை சங்கீத சபைக்கு அருகிலும்) 138, கே.கே.எஸ். வீதி. (C-1129)



## யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில்

இன்றுமுதல் (04.10.2024) தீபாவளி தினம் வரை

## இந்தியன் செலக்ஷனின்

பிரமாண்டமான

# தீபாவளி

SPECIAL OFFER!

ஜவுளிக் கொண்டாட்டம்



சாறி OFFER விசேட விலைக் கழிவு

~~1500/=~~ → 1000/=
~~3000/=~~ → 2000/=
~~3500/=~~ → 2500/=
~~4000/=~~ → 2800/=
~~6000/=~~ → 4000/=

நூற்றுக்கணக்கான டிசைன்களில் சாறிகள், சல்வார்கள், சல்வார் துணிகள், லெஹங்கா, டொப், பார்ட்டி புறொக் என ஏராளமான ஆடைத்தெரிவுகள்


இம்முறையும் தீபாவளியை
இந்தியன் செலக்ஷனுடன் கொண்டாடுங்கள் (406)

காலம் : 04.10.2024 - தீபாவளி தினம் வரை
இடம் : வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்.
(வாரத்தின் 07 நாட்களும் திறந்திருக்கும்)


## மரண அறிவித்தல்

## சண்முகம் இராசதுரை

(ஓய்வுபெற்ற முகாமையாளர் – யாழ்ப்பாணம், மானிப்பாய் – பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் மற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர் (மேர்க்கன் ரயில்) )



பிறப்பு 10.05.1947 | இறப்பு 05.10.2024

சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் உடுவில் தெற்கு சத்தியபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் இராசதுரை அவர்கள் 05.10.2024 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகம் - பொன்னு தம்பதியரின் அன்பு மகனும் அருளப்பு - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகனும் தேவமலர்(பட்டு) அவர்களின் பாசமிகு கணவரும் டயானாகுயின், கிறிஸ்ரியானா (அபிவிருத்தி உத்தியோகத்தர் வலயக்கல்வி அலுவலகம் - முல்லைத்தீவு), ஜீசஸ்கிங்(முகாமையாளர், மானிப்பாய் ப.நோ.கூ.ச) ஆகியோரின் அன்புத் தந்தையும் ரங்கநாதனின் பாசமிகு மாமனாரும் குயின்ரன், ஜஸ்மின், சாரு ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை 07.10.2024 இன்று திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மல்வம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். (2229)

உடுவில் தெற்கு, சத்தியபுரம்.

தகவல் : ரங்கநாதன் குடும்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.10.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.